கம்பராமாயணக் கருத்தோவியம்



2

சரணாகதி

சாந்தமூர்த்தி

இராம மந்திரம்
சென்னை
1970

கம்பராமாயணக்

கருத்தோவியம்

2

சரணாகதி

சாந்தமூர்த்தி

இராம மந்திரம்
சென்னை
1970

முதற்பதிப்பு: நவம்பர் 1970.

விலை ரூ. 1-50

பரணி அச்சகம்,
55, பெரம்பூர் பாரக்ஸ் சாலை,
சென்னை-7.

உ

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்
ஸ்ரீ மடம்

காஞ்சீபுரம்

முகாம் : வேலூர், வ. ஆ. ஜில்லா

தேதி 28-12-1970

சென்னையில் வசிக்கும் ஸ்ரீ சாந்தமூர்த்தி, கம்ப ராமாயணத்தில் உள்ள பாடல்களையும் கருத்துக்களையும் எளிய நடையில் தொகுத்து "கம்பராமாயணக் கருத்தோவியம்" என்ற நூலை எழுதியிருப்பதைக் கண்ணுற்று சந்தோஷிக்கிறோம்.

முக்யமாக இந்நூலின் விபிஷண சரணாகதி படலத்தில் உள்ள பாடல்களைப் பொறுக்கி எடுத்து சரணாகதி தத்துவத்தை விளக்கி உள்ளார். ஆஸ்தீக அன்பர்கள் இவ்வுத்தமமான நூலைப் படித்து பயன் அடையும்படி ஆசிர்வதிக்கின்றோம்.

அணிந்துரை

('சிந்தாமணிச் செல்வர்', 'செந்தமிழ்க் களஞ்சியம்'
மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள்)

உயர்திருவாளர் சாந்தமூர்த்தி என்னும் பெரியார் 'கம்ப ராமாயணக் கருத்தோவியம்' என்னும் மகுடம் புனைந்து விபீடண சரணாகதியை விளக்க உரையுடன் வெளியிட்ட நூலைப் பார்த்து மகிழ்ந்தேன். பெரியோர் இராமகாதையைச் சரணாகதிக் காவியம் என வழங்குவதும் உண்டு. இதனால், விபீடண சரணாகதி இராமாயண மாண்பை விளக்குவது தெளிவாம்.

நலங்காக்கும் நாரணன் எடுத்தருளிய அவதாரங்கள் அனைத்தும் உலகத்துயர் நீக்கத் தீயோரையழித்து நல்லோரைக் காப்பதே குறிக்கோளாய்க் கொண்டவை என்பதைக் கீதாசாரியனாகிய கண்ணபிரான் அருளிய கீதையாலறியலாம்.

இராவணனாதியரான கொடியவரையழித்த இராமபிரான் அரக்கர் குலத்துதித்தவனாயினும் விபீடணனுக்கு அடைக்கல மளிப்பதில் பின்வாங்காமை கருதத்தக்கது. எக்குடிப் பிறப்பினும் இறைவனை மறவாத ஏற்றமுடையவர் போற்றப்படுவர் என்பதற்கு விபீடணன் வரலாறு இயைந்த எடுத்துக்காட்டாய் இலங்குகிறது.

வடிவிற் சிறியதாயினும் பொருளாற் பெரியதாகிய இந்நூலை அனைவர்க்கும் பயன்படத் தக்க வகையில் ஆர்வத்துடன் வெளியிட்ட பெரியார் சாந்தமூர்த்தி சாமிகளின் அறச்செயலைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

இவர்கள் கம்பராமாயணத்திலுள்ள 438 பாடல்களைத் தொகுத்து விளக்கவுரையுடன் 'கடவுள்' என்னும் மகுடம் புனைந்து வெளியிட நடைபெறும் முயற்சி இறைவன் திருவருளால் விரைந்து முடிவெய்தி நலம் விளைக்க வேண்டுமென விழைகின்றேன்.

சென்னை-7
30—11—1970 } மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

நூன்முகம்

இராமாயணம் ஒரு மாபெருங்காப்பியம். இது சத்து, சித்து, ஆனந்தமாய், இவ்வுலகங்களை ஆக்கி, அளித்து, அழிப்பதாய், சர்வபரிபூரணமாய் இருக்கும் பரம்பொருளின் பெருமைகளையும் உலக தர்மாதர்மங்களையும் எடுத்து வெகு வித்தாரமாய்க் கூறும் வேதமனையது. இதனைக் கல்வியிற்பெரியரும் கலைமகளின் அருள் பெற்றவருமாகிய கம்பர் பெருமான், தமிழுலகுக்கு நற்றமிழில் தமிழரின் உயர்ந்த நாகரிகத்திற்கியையப் பல விகற்பங்களோடு அமைத்துச் சமைத்திருப்பதோடல்லாமல், இராம காப்பியத்தின் இயம்பருஞ் சிறப்பினைக் கவி நயம், பொருள் நயங்களோடு தமிழின் பெருமையையும் நன்கு எடுத்துக் காட்டுகிறார். ஆதலால் கடவுளின் அருளைப்பெற்று இகபரங்களை அடைய விரும்புபவர் களும், தமிழ்க்கலையின் சுவையையும் ஆழத்தையுங் கண்டு களிக்க விரும்பும் தமிழர் அனைவரும் இக்கம்பராமாயணத்தைக் கற்று, கேட்டு, உணர்ந்து எல்லா நன்மைகளையும் அடையவேண்டும் என, எல்லாம் வல்ல இராமபிரானின் திருவடிகளைப் பணிந்து பிரார்த்திக்கிறேன்.

தமிழ் மொழியில் உள்ள எல்லா நூல்களுள்ளும் மிகச் சிறப் புடைத்தாய், தலைசிறந்து நிற்பது தெய்வப் புலமைத் திருவள்ளுவர் பெருமானுரால் அருளப் பெற்றுள்ள திருக்குறள் என்பதை உலகம் அறியும். இதைப்போலவே சிறப்புடைத்தாய இரண்டாவது நூல் தெய்வப் புலமைக் கம்பர் பெருமானுரால் அருளப் பெற்ற கம்ப ராமாயணமென்பதும் உலகம் ஆய்ந்துணர்ந்து ஒப்புக் கொள்ளப்பட்டதொன்று.

வள்ளுவர் பெருமான் அறம், பொருள், இன்பங்களை ஒரு நூற்று முப்பத்து மூன்று அத்தியாயங்களில், அத்தியாயம் ஒன்றுக்கு பப்பத்துக் குறட்பாக்களாகத் தொடர்ந்து ஓர் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களில் சுருக்கமாக யாத்துத் தந் துள்ளார். கம்பர் பெருமானே, வள்ளுவர் பெருமான் சொல்லிய வற்றையுங் கொண்டு மற்றும் பல விஷயங்களையும் சமுத்திரம் போன்ற இராம காதையினூடே வள்ளுவர் குறளுக்கு வாய்த்த தோர் உரையோ எனக் கருதுமாறு, வள்ளுவர் வாக்குகளையும், கருத்துகளையும், மற்றும் பலவற்றையும், மிக அழகாகவும் விளக்க மாகவும், கதையின் சமய சந்தர்ப்பங்களுக்கேற்பப் பொருத்தி, சுமார், 10,500 விருத்தப்பாக்களில் புனைந்து, ஒரு தெவிட்டாத தெள்ளமுதக் கடலாகவும் அகக்கண் கண்டு களிக்கும் கருத்தோவி யங்களாகவும் தீட்டித் தந்துள்ளார் என்பதை யாவரும் அறிவர்.

ஆனால், ஒரே கருத்தமைந்த பாக்கள் பலவிடங்களில் பரவலாக அமையப் பெற்றிருப்பதால், அவை யாண்டாண்டு அமைந்துள்ளன

வென்பது, கம்பராமாயணச் செய்யுள்களனைத்தையும் துருவி ஆய்வார்க்கே அறியக்கூடியதாயிருக்கிறது. இம்முயற்சியிலீடு பட எல்லார்க்கும் இயையாது; ஒய்வும் நேராது. ஆதலால், இப் பெரும்பணியில் சிற்றறிவுடையனும் நான் ஆசை வயப்பட்டு இறங்கி அவ்வோவியங்களை ஒரு வரிசையின்பால் அமைக்க முயலுங் கால்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்"

என்று வள்ளுவப் பெருமான் வழங்கியதற்கேற்ப, கம்பர் பெருமானும்

"அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணுங்களே"

என்று அடியொற்றிச் செல்வதால், 'சரணுகதி' என்பது இந் நூலின் இரண்டாவது ஓவியமாய் அமைகிறது.

இவ்வரிய நூலின் சாரமாகிய சரணுகதி என்னும் இப்பகுதியை இப்புத்தகவடிவிற் கொணர விரும்பிய அடியே னுக்கு, சிரமம் பாராது ஒப்பு நோக்கிச் செப்பனிட்டுத் தந்த நண்பர் வித்துவான் திரு. கா. பெ. ஞானசம்பந்தம் அவர்களுக்கும், உள்ளன்போடு இலாபங் கருதாது அச்சிட்டளித்த நண்பரும் பரணி அச்சக உரிமையாளருமான திரு. மா. செல்வராஜர் அவர் களுக்கும், இத்தகைய நூல்கள் வெளிவர வேண்டுமென்று ஆசி கூறிய ஆன்றோர் சான்றோர் யாவர்க்கும் எனது அன்பார்ந்த நன்றியைச் செலுத்துங் கடப்பாடுடையேன்.

அடியேனின் சிறுமைகளைப் பொருட்படுத்தாது என் நல்லெண் ணம் ஒன்றனையே அடிப்படையாகக் கொண்டு மதிப்புரை தந் தருளிய பெரியார் மகாவித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கட்கு என் நன்றி என்றென்றும் உரியதாகுக.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களது நல்லாசியை அடியேன் நாடியபோது, ஸ்ரீலஸ்ரீ சந்நிதானம் இன் முகம், அருள்நோக்கு, புன்முறுவல், தண்ணுரை, சத்தமுது, புத்தாடை, சன்மானங்களோடு ஸ்ரீமுகம் அளித்தருளி ஆட் கொண்டதை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் என் உளம் பூரிக்கின்றது. இவை எப்பிறவியினும் மறக்கற்பாலதன்று.

ஸ்ரீலஸ்ரீ சந்நிதானத்தின் சீர்பாத கமலங்கள் உலகுய்ய நீடுழி வாழ்க வாழ்கவெனப் பல்லாண்டு கூறிப் போற்றி எனது நன்றி சமர்ப்பித்து அமைகின்றேன்.

உலகம் நாளும் இன்புற்று வாழ அருள் புரிய எல்லாம் வல்ல இராமபிரானின் திருவடிகளிற் சரண்புகுகின்றேன்.

சாந்தமூர்த்தி

சரணைகதி

கடவுள் வணக்கம்

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே.

(த.சி.பா.—1)

எல்லா உலகங்களையும் தாம் ஒருவரேயாய்ப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் இடைவிடாது அளவிறந்த ஆடல்களாய் உடையவரான அகாரப் பொருளா மவரே இவ்வுலகங்களுக்கெல்லாம் தலைவராகும் கடவுள். அத் தகைய கடவுளுக்கே நாங்கள் அடைக்கலம்.

சிற்கு ணத்தர் தெரிவரு நன்னிலை
எற்கு ணர்த்தரி தெண்ணிய மூன்றனுள்
முற்கு ணத்தவ ரேமுத லோரவர்
நற்கு ணக்கட லாடுத னன்றரோ.

(த.சி.பா.—2)

ஞானிகளாலும் இப்படியென்று அறிந்து சொல்ல முடியாத அக் கடவுளினது தன்மையைப் பிறர் அறிந்துகொள்ளும் அளவுக்கு எடுத்துச் சொல்லுவது என்னல் இயலாத காரியமாகும். சாத் திரங்கள் எடுத்துக் கூறுகின்ற சத்துவம், இராஜசம், தாமசம் என்ற மூன்று குணங்களுள் சிறந்த குணமாகிய சத்துவகுணத் திருமாலே மும்மூர்த்திகளுள் முதல் மூர்த்தியாவர். அவருடைய மங்கள குணக்கடலிலே தோய்தல் மிகவும் நன்று.

ஆதி யந்த மரியென யாவையும்
ஓதி னரல கில்லன வுள்ளன
வேத மென்பன மெய்ந்நெறி நன்மையன்
பாத மல்லது பற்றிலர் பற்றிலார்.

(த.சி.பா.—3)

அளவிறந்தனவாயும் அழியாதனவாயும் உள்ள வேதங்க ளென்று சொல்லப்படும் எல்லாவற்றையும் ஓத ஆரம்பிக்கும் போதும், ஓதி முடிக்கும்போதும் ‘அரி ஓம்’ என்று சொல்லி அவ்வேதப்பொருள்களை உணர்ந்தவர்களும், பற்றற்ற வைராக்கிய சீலர்களும் ஆகிய பெரியோர்கள் உண்மைப் பொருளாயும், சகல நன்மைகளையும் தருபவருமாகிய அக் கடவுளின் திருவடிகளிலே யன்றி வேறு எதுவொன்றிலும் ஆசை வைக்க மாட்டார்கள்.

கம்பராமாயணம்
விபீடண சரணாகதி

தோற்றுவாய்

இராமாயணம் ஒரு சரணாகதி வேதம். மக்கள் நற்கதி பெறு தற்கு ஏற்ற கருவியாக உள்ளது வேதம். அது கரும காண்டம், ஞான காண்டம் என்னும் இரு பகுதிகளையுடையது. கடவுளின் ஆராதனையைப்பற்றிக் கூறுவது கர்ம காண்டம். ஆராதித்தற் குரிய கடவுளைப்பற்றிக் கூறுவது ஞான காண்டம். இவ்விரண் டனுள் ஞான காண்டமே சிறந்தது.

வேதப் பொருளை விரிவாக எடுத்துக் கூறும் நூல்கள் ஸ்மிருதி, புராணம், இதிஹாஸம் என்பவை. இவற்றுள், ஸ்மிருதி கர்ம காண்டப் பொருளை உணர்த்துகிறது. புராண, இதிகாசங்களோ ஆன்மா ஈடேறற்குச் சிறந்த சாதனங்களாக நிற்கின்றன. இவற்றுள், தோற்றம், ஒடுக்கம், மந்வந்தரம், முனிவர் அரசர் மரபு, அவர்களின் சரித்திரம் என்னும் ஐந்தையும் விவரிப்பது புராணம். ஒரு சரிதையைப் பிரதானமாகக் கொண்டு பல கிளைக் கதைகளோடு புணர்த்துக் கூறுவது இதிகாசம். புராணங்கள் பதினெட்டு என்ப. மற்றும் உப புராணங்கள் பதினெட்டுள்ளன இதிகாசங்கள் இராமாயணம், மகாபாரதம் என்னும் இரண்டு. இவ்விரண்டனுள் இராமாயணம், புருடோத்தமனான ஸ்ரீ இராமச் சந்திர மூர்த்தியின் சரித்திரத்தினைப் பிரதானமாகக் கொண்டிருத்த லாலும், பிரம்மாவின் ஆசிபெற்று சரஸ்வதியே ஸ்ரீ வான்மீகி மகரிஷியின் வாக்கிலிருந்து கூறியதாலும் அப்பியாசிகட்குக் கைமேற் பலனளிப்பதாதலாலும் உலகினரால் பெரிதும் பாராட் டப்பட்டுவருகிறது.

வேதோபப்பிரமாணம் எனப் புகழ்பெற்ற இவ்விராமாயணம் வேதப் பொருள்கள் பலவற்றை விவரமாக எடுத்துக் கூறுகின்றது. ஆயினும், எந்த ஒரு பொருளைத் தலைமையாகக் கூறுகின்றதென்று பார்ப்போம். ஒரு நூலில் கூறப்படும் தலைமைப் பொருள் இன்னதுதானென்று அந் நூற் கருத்தை அறுதியிடுமிடத்து, நூலோர் உபக்கிரமம் (தொடக்கம்), உப சங்காரம் (முடிவு),

அப்பியாசம் (பன்முறை பகர்தல்) என்பவற்றைக் கருவியாகக் கொள்ப. அம் முறைபற்றி ஆராயின் இவ்விராமாயணம் முதற் காண்டமாம் பாலகாண்டத்திலிருந்து, இறுதிக் காண்டமாம் யுத்தகாண்டம் வரையில் பகவானைச் சரணமாக, சேதனன் ஈடேறுதற்குச் சிறந்த உபாயமாகும் என்று வற்புறுத்திக் கூறு கின்றது. சரணுகதத்தின் இன்றியமையாத் தன்மை இந் நூலில் மிகச் சிறப்பாகக் காணப்படுகிறது. இது யாண்டு யாண்டு எவ்வெவ்வகையில் கூறப்பட்டிருக்கிறதென்பதையும் காண்பாம்.

பால காண்டத்தில்

தேவர்கள், அரக்கர்களால் துன்புறுத்தப்பெற்றதைத் தாங்க லாற்ருது, திருப்பாற் கடலிற்றுயிலும் பரமனிடம் சரண் புகுந்து,

"ஐயிரு தலையினே னனுச ராதியாம்
மெய்வலி யரக்கரால் விண்ணு மண்ணுமே
செய்தவ மிழந்தன திருவி ஞயக
உய்திற னில்லையென் றுயிர்ப்பு வீங்கினர்"

(தி.அ.ப.—17)

'இலக்குமி நாயகரே, பத்துத்தலை இராவணனும், அவன் தம்பியராதிய மிக்க பலசாலிகளான அரக்கர்களாலும், விண்ணுல கத்தவரும், மண்ணுலகத்தவரும் அவர்கள் செய்ய வேண்டிய தவங்களைச் செய்ய முடியாமல் அவற்றைக் கைவிட்டனர். இனி உய்வதற்கு வழியில்லை' என்று கூறி பெருமூச்சுவிட்டனர். அது கண்ட பரம தயாநிதியாகிய திருமால்,

"................................... வருந்தல் வஞ்சகன்
தன்றலை யறுத்திடர் தணிப்பன் ருரணிக்கு"

(தி.அ.ப. 19)

'நீங்கள் வருத்தப்படாதீர்கள். யான் பூமியில் ஒரு மானுட ளுகத் தோன்றி, வஞ்சகனுகிய இராவணனுடைய சிரங்களை அறுத்துத்தள்ளி, உங்கள் துன்பங்களைப் போக்குவேன்.'

"மசரத மனையவர் வரமும் வாழ்வுமோர்
நிசரத கணைகளா னிறு செய்யயாம்
கசரத துரகமாக் கடல்கொள் காவலன்
தசரதன் மதலையாய் வருதுந் தாரணி;

வளையொடு திகிரியும் வடவை தீதர
விளைதரு கடுவுடை விரிகொள் பாயலும்
இளைஞர்க ளெனவடி பரவ வேகிநாம்
வளமதி லயோத்தியில் வருது மென்றனன்"

(தி.அ.ப.—21-22)

'பேய்த்தேரையொத்த மாயாவிகளான அரக்கர்களின் வரத்தையும், வாழ்வையும் ஒப்பற்ற எனது பாணங்களினுல் தூளாகும்படி, யானே, தேர், குதிரைகளோடுகூடிய பெரிய சேனு சமுத்திரத்தையுடைய தசரதச் சக்கரவர்த்திக்குப் புத்திரனுய் பூமியில் வந்து பிறப்பேன். என் சங்கும், சக்கரமும், வடவா முகாக்கினியுங் கரிந்துபோகும்படியான பொங்கும் விஷத்தை யுடைய எனது பாயாக விரிந்துள்ள ஆதிசேஷனும், என் தம்பி மார்களாக வந்து என் பாதங்களே வணங்க, நாம் சென்று, வளேந்த மதில்களேயுடைய அயோத்திமாநகரில் அவதரிப்போம்' என்று கூறி அபயமளித்தமையும்,

அயோத்தியா காண்டத்தில்

இராமபிரான் தன்னே நீத்துக் கானகஞ் செல்வதையறிந்த இலக்குமணப் பெருமாள்,

"செய்துடைச் செல்வமோ யாதுந் தீர்ந்தெமை
கைதுடைத் தேகவுங் கடவை யோவைய
நெய்துடைத் தடையலர் நேய மாதர்கள்
மைதுடைத் துறைபுகும் வயங்கொள் வேலினுய்"

(ந.நீ.ப.—*160*)

'துருப்பிடிக்காமலிருக்கும் பொருட்டு நெய் பூசப்பட்டு சத்துருக்களுடைய பட்டமகிஷிகளின் கண்களிலிட்ட மையை அவர்கள் கண்ணீரால் கழுவி உறைபுகுகின்ற வெற்றிவேலினே உடையவரே, தலேவரே, தங்களுக்குரிய எல்லாச் செல்வங்களேயும் நீங்கி, எங்களேயும் கைவிட்டுக் காட்டிற்குப் போகக் கடவீரோ? என்று ஏங்கி இரந்ததால், இராமபிரான் ஒன்றுஞ் சொல்லமுடியாமல் மௌனமாக அவன் விருப்பத்திற்கு இணங்கி அபயமளித்தமையும்,

பரதாழ்வார் சித்திரகூடத்தில் இராமபிரானேச் சந்தித்து அயோத்திக்கு மீண்டு அரசு புரியவேண்டுமென்று இரந்தபோது, தக்க சமாதானங்களேக் கூறி, அவன் மனங்குளிரப் பாதுகைகளேக் கொடுத்து அபயமளித்தமையும்,

ஆரணிய காண்டத்தில்

தண்டகாரணிய மகரிஷிகள் அரக்கர்களின் கொடுமைகளேத் தாங்கமுடியாமல் துன்புற்றிருந்தகாலே, இராமபிரான் ஆண்டுச் செல்லவே, மகரிஷிகள் இராமபிரானேக் கண்டதும்,

"உருளுடைய நேமியா லுலகை யோம்பிய
பொருளுடை மன்னவன் புதல்வ போக்கிலா
இருளிடை வைகினேம் இரவி தோன்றினுய்
அருளுடை வீரநின் னபயம் யாம்என்றுர்"

(அக.ப.—*16*)

'உருள்கின்ற ஆக்ஞா சக்கரத்தினுல் உலக முழுவதையும் காத்த பெரிய செல்வங்களையுடை தசரத குமாரனே, நீங்குத லில்லாத துன்பப் பேரிருளில் இருந்தோம். சூரியனைப்போல் தாங்கள் இங்கு வந்தருளினீர்கள். கருணை ததும்பும் வீரரே! நாங்கள் தங்கள்பால் அடைக்கலம்' என்று விண்ணப்பித்தனர். விண்ணப்பிக்கவே,

"சூர றுத்தவ னுஞ்சுடர் நேமியும்
ஊர றுத்த வொருவனு மோம்பினும்
ஆர றத்திஞே டன்றிநின் ருரவர்
வேர றுப்பன் வெருவன்மி னீரென்ருன்"

(அக.ப.—22)

'சூரபதுமன் என்னும் அசுரனை அழித்த் சுப்பிரமணியனும், சுடர் வீசும் சக்ரதாரியான மகாவிஷ்ணுவும், திரிபுரங்களை எரித் தழித்த பரமசிவனும் துணைநின்று காத்தாலும், எவ்வரக்கர்கள் தர்மத்தை நீக்கி அதரும காரியங்களைச் செய்தார்களோ, அவர் களை வேரோடு அழித்துவிடுவேன். நீங்கள் பயப்படாதீர்கள்' என்று கூறி அபயமளித்தமையும்,

கிட்கிந்தா காண்டத்தில்

சுக்கிரீவன் இராமபிரானை அணுகி,

"முரனுடைத் தடக்கை யோச்சி
முன்னவன் பின்வந் தேனை
இருனிலைப் புறத்தின் காறும்
உலகெங்குந் தொடர வக்குன்(று)
அரனுடைத் தாகி யுய்ந்தேன்
ஆருயிர் துறக்க லாற்றேன்
சரனுனைப் புகுந்தே னென்னைத்
தாங்குதல் தரும மென்ருன்"

(ந.கோ.ப.—25)

'என் தமையனுன வாலி அவன் தம்பியாகிய என்னை, வலிமை மிக்க அவன் கைகளை ஓங்கிக்கொண்டு இருளுக்கு உறைவிட மாகிய இவ்வுலகுக்கு அப்புறம்வரையிலும், இன்னும் எல்லா உலகங்களிலும் என்னைப் பின்தொடர்ந்து துரத்த, இம்மலையையே பாதுகாவலாகக் கொண்டு பிழைத்தவனும், பிராணனைவிடமாட் டாமல் வைத்துக்கொண்டிருப்பவனுமாகிய நான் இப்பொழுது தேவரீரை அடைக்கலமாக அடைந்தேன். என்னைக் காப்பாற்று தல் மிக்க தருமமாகும்' என்று கூற,

"என்றவக் குரக்கு வேந்தை யிராமனு மிரங்கி நோக்கி
உன்றனக் குரிய வின்ப துன்பங்க ளுள்ள முன்னாள்
சென்றன போக மேல்வந் துறுவன தீர்ப்ப லன்ன
நின்றன வெனக்கு நிற்கு நேரென மொழியு நேரா"

(ந.ப.—26)

இவ்வாறு கூறிய அந்தக் குரங்குகளுக்கு அரசனான சுக்கிரீவனை இராமபிரானும் மனமிரங்கி கடாட்சித்து, 'உன்னுடைய சுகதுக்கங்கள் முன்னே கழித்தவைபோக இனி வந்து நேரும் துன்பங்களையெல்லாம் நீக்குவன். இனி வருவனவாகும் சுகதுக்கங்கள் எனக்கும் உனக்கும் சமமாகும்' என்று வாக்குத் தத்தம் செய்து,

"மாற்றினி யுரைப்ப தென்னே வானிடை மண்ணி னின்னைச்
செற்றவ ரென்னைச் செற்றார் தீயரே யெனினு முன்னோ(டு)
உற்றவ ரெனக்கு முற்றா ருன்கிளை யெனதென் காதற்
சுற்றமுன் சுற்ற நீயென் னின்னுயிர்த் துணைவ னென்றான்"

(ந.கோ.ப.—27)

'இனி நான் உனக்கு அதிகமாக எடுத்துச் சொல்வதற்கு என்ன இருக்கிறது. சுவர்க்கத்திலாகட்டும், இப் பூவுலகத்திலாகட்டும் உன்னை வருத்தியவர் என்னை வருத்தியவராவர். துட்டர்களேயாயினும் உன்னுடன் சேர்ந்தவர்கள் எனக்கும் நண்பர்களே. உனது பந்து ஜனம் எனது பந்து ஜனம். என்மீது அன்பு வைத்திருக்கும் என் பந்து வர்க்கம் அனைத்தும் உன் பந்து வர்க்கமே யாவர். நீ எனது இனிய பிராணசிநேகிதன் ஆவாய்' என்று கூறி அபயமளித்தமையும்,

சுந்தர காண்டத்தில்

இந்திரன் மகன் ஜயந்தன் காகாசுரன் உருவங்கொண்டு சீதா பிராட்டியின் மார்பைக் கிளறியதற்காகத் தண்டிப்பான் வேண்டி ஒரு புல்லைப் பிடுங்கி அதையே பிரமாஸ்திரமாகப் பிரயோகித்த போது, அது அவனைக் கொல்லத் துரத்திச்செல்ல, அவன் எங்கெங்கோ ஓடியும், தேவராதியரை அடுத்தும் தப்ப வழியின்றித் துடிக்க அது கண்ட எல்லோரும் ஒருமுகமாகத் தங்களால் ஒன்றும் ஆகாதென்றும், இராமன் கழல்களே கதி என்று புத்தி கூற,

"ஐய நின்சர ணஞ்சர ணென்றவ னஞ்சி
வையம் வந்து வணங்கிட வள்ளல் மகிழ்ந்தே
வெய்ய வன்க ணிரண்டோடு போகென விட்ட
தெய்வ வெம்படை யுற்றுள தன்மை தெரிப்பாய்"

(சூ.ப.—80)

அச் சயந்தன் பயந்து பூலோகத்துக்கு வந்து இராமபிரானை அணுகி, தலைவரே, தங்கள் திருவடிகளே எனக்கு இரட்சகமாம் என்று சொல்லிக்கொண்டே காலில் விழுந்து வணங்க, பரமதீன தயாளுவான இராமபிரான் திருவுள்ளமுவந்து, 'கொடிய இக் காகத்தினது இரண்டாவது கண்ணைக் கவர்தலோடு போ' என்று அத்திரத்திற்குக் கட்டளையிட, அத்தெய்வீக அத்திரம் அவ்வாறே அதன் கண்விழிகளிரண்டனுள் ஒன்றைப் பறித்துக் கொண்டு சென்ற தன்மையை எடுத்துச் சொல்வாயாக.

"எந்தை நின்சர ணஞ்சர ணென்றவி தன்னால்
முந்து நின்குறை யும்பொறை தந்தன முந்துன்
சந்த மொன்று கொடித்திறன் கண்க டமக்கே
வந்தொர் நன்மணி நிற்கென வைத்ததும் வைப்பாய்"
(சு.கா.—சூ.ப.—81

'தலைவரே, உனது திருவடிகளே இரக்ஷகமாம் என்று நீ சொன்னதனால், முன்னே நீ செய்த குற்றத்தையும் பொறுத்தல் செய்தோம். எதிரேயுள்ள உன் வடிவுடைய காக்கைக் கூட்டங் களுக்கு நல்ல கருவிழி ஒன்றுதானே உலாவிவந்து நிற்பதாக' என்று இராமபிரான் அனுக்கிரகம் செய்ததையும் அடையாள மொழியாக எடுத்துக் கூறுவாய் என்றதிலிருந்து காகாசுரனுக்கு அபயம் அளித்தமையும்,

விபீடணன் வந்து இராமபிரானைச் சரணடைந்தபோது' ஆண்டு இருந்த அனைவரும், அனுமன் ஒருவரைத் தவிர, அவனை ஏற்கலாகாதென்று தக்க காரணங்களோடு எடுத்துக் கூற,

"பிறந்தநாட் டொடங்கி யாரும் துலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்தநா ளுண்டோ வென்னைச் சரணென வாழ்கின் றானைத்
துறந்தநாட் கின்று வந்து துன்னினான் சூழ்ச்சி யாலே
இறந்தநா ளன்றே யென்று மிருந்தநா ளாவ தென்றான்"
(யு.கா.—வி.ப.—110)

'சரணென அடைந்த புறாவினுயிரைக் காக்கும்பொருட்டுத் தராசுத்தட்டிலேறிய என் குலமுன்னோனான சிபிச் சக்கரவர்த்தி யின் வரலாற்றை எவரேனும் மறந்ததுண்டோ? அப்படி இருத்த லால் என்னை அடைக்கலமாக வந்தடைந்து வாழ்வுபெற்று இருக்கிற இவ்விபீடணனை என் உயிருக்கு ஏதேனும் ஆபத்து வருமென அஞ்சிக் கைவிடுவேனானால், அவ்வாறு கைவிடுகிற நாளைக்காட்டி லும், இன்று வந்து சேர்ந்தவனாகிய இவ்விபீடணனுடைய தந்திரத் தினால் எனக்கு மரணமே நேருமானாலும், அவ்வாறு மரணமடைந்த நாளல்லவா என்றைக்கும் அழியாது நிற்கும் நாளாகும் என்று இராமபிரான் கூறினார் என்றதிலிருந்து விபீடணனுக்கு அபயமளித்து அரசளித்தமையும்,

அசோகவனத்தில்

சீதாபிராட்டியை வருத்திய அரக்கியரை, அனுமன்

"குடல் குறைத்துக் குருதி குடித்திவர்
உடன்மு ருக்கியிட் டுண்குவே னென்றலும்
அடல ரக்கிய ரன்னைநின் பாதமே
விடல மெய்ச்சர ணென்று விளம்பலும்"

(யு.கா.—மீ.ப.—33)

'இவ்வரக்கியர்களுடைய குடல்களைப் பறித்தெடுத்து இரத்தத்தைக் குடித்து உடம்பைச் சின்னபின்னமாகச் சிதைத்து உண்பேன்' என்று கோபத்தோடு சொன்னவுடனே, அது கேட்ட கொடுமையுடைய இராட்சசிகள், சீதாபிராட்டியிடம் ஓடிவந்து, 'தாயே, உன்னுடைய திருவடியே எங்கட்குப் புகலிடம், அதனை நாங்கள் விடமாட்டோம்' என்று சொல்லிச் சீதையைச் சரணமடைந்தவளவிலே,

"அன்னை யஞ்சன்மி னஞ்சன்மி னீரெனு
மன்னு மாருதி மாமுக நோக்கிவேறு
என்ன தீமை யிவரிழைத் தாரவன்
சொன்ன சொல்லின தல்லது தூய்மையோய்"

(யு.கா.—மீ.ப. —34)

உலகமாதாவான சீதாபிராட்டி 'நீங்கள் பயப்படாதிருங்கள்' என்று சொல்லி அவ்வரக்கியர்க்கு அபயமளித்து, அனுமனுடைய முகத்தைப் பார்த்து, 'பரிசுத்த குணமுடையவரே, இந்த அரக்கியர்கள் அவர்கள் தலைவனான இராவணன் கட்டளையிட்டபடியே கடுஞ்சொற்களைச் சொன்னார்களே தவிர, வேறு என்ன தீங்கு செய்தார்கள்' என்று அனுமனுக்கு நீதிகளை எடுத்துக் கூறிச் சமாதானப்படுத்தியதிலிருந்து அரக்கியர்க்கு அபயமளித்தமையும் சாங்கோபாங்கமாக இந் நூலிற் கூறப்படுகிறது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது இராமாயணம் சரணாகதப்பிரதானத் தன்மையை எவ்வளவு அழகாக ஆதி முதல் அந்தம்வரை எடுத்தோதுகின்றது என்பது காணக்கிடக்கின்றது. ஆகவே, இராமாயணம் சரணாகத வேதமென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. மேலும், திருமாலின் அவதாரங்கள் யாவுமே அடைக்கலம் புகுந்தவரைக் காப்பதே பொருளாக அமைந்திருப்பதை அவ்வவ் அவதாரங்களைப்பற்றி ஆராய்வோருக்கு நன்கு விளங்கும்.

ஆதலால், கடவுளைக் காணும் வேட்கை யுடையார் மேற் கொள்ளும் உபாயங்களாம் கருமம், பக்தி, ஞானம், பிரபத்தி என்னும் நான்கனுள் பிரபத்தி என்னும் சரணுகதி ஒன்றுதான் மிக எளியதாகவும், யாவர்க்கும் அனுட்டான சாத்தியமானது மாக இருக்கிறதென்பது தெளிவாகிறது. இதுபற்றியே நமது தமிழ்மறை ஆசிரியராம் வள்ளுவப் பெருமானுர்,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

என்று அறுதியிட்டுக் கூறிப்போந்துள்ளார்.

ஆதலால், ஆறறிவுபெற்று வாழும் மானிடப் பிறவியராம் நாம் கடவுளின் திருவடிகளையே அனன்னிய சரணுக அடைந்து கடைத்தேறுவோமாக.

விபீடண சரணுகதி

சரணுகதமே சுலபமான வழி என்பது

சரணுகதித் தன்மையின் பெருமையினை நன்கு விளக்கும் கட்டம், கம்பராமாயணத்தில் எதுவென்ருல், யுத்த காண்டத்தி லுள்ள "விபீடண அடைக்கலப் படலம்" என்பதே. இஃது ஆண்ட வன் திருவடிகளைப் பற்றி உய்யவேண்டும் என்னும் ஆவல் மிக் குடையார்க்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இதனை வள்ளுவர் பெருந்தகையும்

"பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" (திருக்குறள்)

என்று எவ்வளவு ஆணித்திறமாய் வற்புறுத்துகிருர் பாருங்கள். ஆதலால், இராமாயண சாரமாகிய இப் பிரபல விபீடண சரணு கதியாம் சரித்திராமிர்தத்தைக் கம்பர் பெருமான் காட்டும் அழகைக் கண்டும் கற்றும் பயன் பெறுவோமாக.

விபீடண சரணுகதி

கதை விளக்கம்

இராமபிரான் தன் எழுபது வெள்ள வானரச் சேனையுடன தெற்குக் கடற்கரையில் வந்து சேர்ந்தார். அப் பெருஞ் சேனையின் பாரத்தைத் தாங்கமாட்டாமல் அப் பகுதி தாழ்ந்து வடபகுதியாம் மலை, கடல், பூமி எல்லாமுமே வானுற உயர்ந்தன என்பதை வெள்ளம் வெள்ளத்திருந்ததென்று சாதுரியமாகப் பேசுகிருர்.

கவிக்கூற்று

1. ஊழி திரியுங் காலத்து
முலையா நிலைய வுயர்கிரியும்
வாழி வற்ரு மறிகடலு
மண்ணும் வடபால் வான்றேயப்
பாழித் தெற்குள் ளனபொருப்பும்
நிலனுந் தாழப் பரந்தெழுந்து
ஏழு பத்தின் பெருவெள்ள
மகர வெள்ளத் திருத்தலால்.

(யு.கா.—க.கா.ப.—1)

இராமபிரான் கடலையே நோக்கிக்கொண்டிருந்தார். கடலில் அலைகள் மேலெழுந்து விழுந்து பரந்த தோற்றமானது, தன்னை விட்டு நீங்கிய பரமன் மீண்டும் வந்துவிட்டான், கண்வளர்வான் என்று எண்ணி, பாயல் விரிப்பதுபோன்றிருந்ததாம். மேலும், தன் அலைகளாம் கரங்களால் முத்து, பவளம் முதலிய பொருள் களை ஏந்திவந்து ஸ்ரீ ராமபிரானது பாத கமலங்களில் காணிக்கை செலுத்துவதுபோல் காட்சியளிக்க, இளந்தென்றலோ நறும்பூந் தாதுக்களை மென்மையாக எடுத்துவந்து அப்புவதாயிற்று. சமுத்திரத்தின் அலைகளோ மேலும் மேலும் உயரக் கிளம்பி ஆரவாரம் செய்துகொண்டிருந்தன. இத் தோற்றம் எப்படி யிருந்ததென்ருல் தன் மகள் சீதாதேவியின் துயர் நீக்கவும், தேவர்களின் குறை தீர்க்கவும், கையில் வில்லும் அம்புமாக

மேற் செல்லும் தன் மருமகனுன இராமனேக் கண்டதும், உள்ளங் குளிர்ந்து சமுத்திரமானது கைகளே உயரத் தூக்கிச் சந்தோஷ ஆரவாரம் செய்வதுபோலிருந்ததாம். இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த இராமபிரான், தன்மானம், துயரம், காதல் என்பனவெல்லாம் ஒன்று சேர்ந்து மேலோங்க, மேலே என்ன செய்யலாம் என்று எண்ணியவண்ணம் இருக்கிருர். இங்கே இராமபிரானின் நிலே இப்படி இருக்க, இலங்கையில் இராவணன் நிலே எப்படியிருக்கின்றதெனப் பார்ப்போம்.

அனுமனுல் இலங்கைமாநகர் எரியுண்டபின், இராவணன் கட்டளேயால் தெய்வத்தச்சனுன மயன் பிரம்மதேவரோடு சென்று, அவர் கருத்தின்படி ஒரு கண நேரத்திற்குள் புதியதோர் இலங்கையைச் சிருட்டித்துவிட்டான். புதிய சிருட்டியாகிய அவ்வ்லங்கை மூன்று லோகத்தினும் அழகுற அமைந்திருந்தது. இராவணன் வந்து பார்த்தான். அது வானுலகத்தினும் அழகு பெற்றிருந்ததால் ஆச்சரியமுற்ருன். ஆனந்தக் கடலில் மூழ்கினுன். கோபமும் சிறிது தணிந்தது. ஒரு குரங்கு வந்து கொளுத்தியதும் ஒரு நன்மையாகவே முடிந்ததென்று எண்ணினுன். இவ்வரிய காரியத்தைச் செய்துகொடுத்த பிரமனேப் பூசித்தான். தெய்வத்தச்சனுன மயனேயும் மெச்சி, சிறப்புச் செய்து அனுப்பிவிட்டு, பதுமராகக் கற்கள் பதித்த ஆயிரக்கணக்கான அழகிய பெரிய தூண்களமைந்த எழில்பூத்த மண்டபத்தில் இடப்பெற்றிருந்த சீரியதோர் சிங்காதனத்தில் அமர்ந்து, வரம் பெற்ற சுற்றம், ஆலோசனே கூறும் பெரியோர், கடல்போன்ற சைன்யம், சிறந்த சேனேத் தலேவர்கள் முதலியவர்கள் புடைசூழ, மார்பில் விளங்கும் மாலே, அரம்பையர் கவரி வீசுதலினுல் அசைய, கொலுவிருந்தான். ஆலோசனே புரியவேண்டியிருந்ததால் முனிவர்கள், தேவர்கள், பருவமங்கையர், இளேஞர் யாவரையும் அப்பாற் செல்லுமாறு ஆணேயிட்டான். வண்டுகள், காற்று எனும் எதுவும் உள்ளே நுழையாதபடி கடுங்காவல்செய்தான். அவனுக்கு பயந்த பறவை, பூச்சியாதியகூட எழுதிய சித்திரம்போல் அசைவற்றிருந்தன வென்ருல் மேலே சொல்லுவானேன்.

இராவணன் கொலுமண்டபத்தில் யார் யார்தான் இருந்தன ரென்ருல், பெரிய மந்திரிகளான சேனேக் காவலனும் பிரகஸ்தன், மகோதரன், வச்சிரதந்தன், துன்முகன், மகாபார்சுவன், பிசாசன், சூரியசத்துரு, யக்ஞசத்துரு, தூமிராட்சன் மற்றும் பலரும், தன் குலத்தவரில் தம்பி கும்பகர்ணன், விபீடணன், மைந்தன் இந்திரசித்து ஆகியவர்களேயாகும். இவர்களேப் பார்த்துப் பேசுகின்ருன்.

இராவணன்

மந்திரி பிரதானிகளே,

2. சுட்டது குரங்கெரி சூறை யாடிடக்
கெட்டது கொடிநகர் கிளேயும் நண்பரும்
பட்டனர் பரிபவம் பரந்த தெங்கணும்
இட்டவிவ் வரியணை யிருந்த தென்னுடல்.

(யு.கா.—இ.ம.ப—12

'என் பெருமை ஓர் அற்பக் குரங்கினுல் அழிந்தது. எனது ஆட்சியும் அரசும் வெகு நன்ருயிருக்கிறது. குரங்குதான் நெருப்பை இட்டதென்றுல் என் முன் நிற்க அஞ்சும் அக்கினி எப்படி அவனுக்குத் துணை நின்ருன் என்பதுதான் ஆச்சரியம். எங்கும் வெற்றிக்கொடி வெகு அழகாகப் பறக்கும் இந் நகர் அழிந்தது. சுற்றமும் நண்பரும் இறந்து போயினர். இங்கே எனக்கென இடப்பெற்ற இச் சிங்காதனத்தில் இவற்றையெல்லாம் பார்க்க என் உடலும் இருந்தது.'

'கிணறுகளிலெல்லாம் இரத்த நீரல்லவா சுரக்கின்றது அக்கினி இன்னும் அணைந்தபாடில்லையே. அகிற் புகைக்கு மாருக அளகப்புகையல்லவா எழுகிறது. நறு நாற்றம் கமழுமிடத்துச் சுறு நாற்றம் வீசுகிறதே. விசேஷமாக எதையும் செய்து முடித்துப் புகழ் பெருவிடினும் அக் குரங்கையாவது கொன்று தொலைத்தோமா. அதைக்கூடச் செய்யமுடியாமற் போயிற்றே. சரி, இனிமேல் என்ன செய்வதென்பதையாவது நன்கு யோசித்துக் கூறுங்கள்' என்ருன்.

பிரகஸ்தன்

அது கேட்ட முதல்வணுகிய சேனைக் காவலன் பிரகஸ்தன் மிகவும் வணங்கிச் சொல்வானுயினன். 'உணர்வுடையோய், நான் அப்போதே சொன்னேன். அற்ப மனிதர்களை வஞ்சித்து அந் நங்கையைக் கொணர்வது அவ்வளவு சரியல்லவென்று. அது நம் வீரத்திற்குப் பொருந்தாதென்றேன். தாங்கள் அதை அப்போது உணரவில்லை. அம் மானிடர் தங்கள் தங்கையின் காது, மூக்குகளை அரிந்தனர். கரன் முதலியோரைப் பதினுயிரம் சேனையோடு கொன்று குவித்தனர். அப்போதே சென்று அவர்களைக் கொன்று போடாது சும்மாயிருந்துவிட்டு, நகர் அழிந்ததேயென்று இப்போது வருந்துகிறீர்களே ! தண்டனைக்குரியவர்களை ஒறுக்காமல் பொறுப்பதுவா வீரவாழ்வு ? தேவர், தானவர்களையெல்லாம் முழுவெற்றி கண்டல்லவா தாங்கள் முதல்வராய் விளங்குவது. பொறுமையி

ஞலா இப் பெற்றி எய்தியது. தாங்களே சொல்லுங்கள். ஏ, குலம் விளக்கவந்த காவலரே, பகைவரைத் தேடிச்சென்று, கொன்று, வென்று மீள வேண்டியிருக்க, இலங்கையிலேயே இருந்து கொண்டு, சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டிருந்தால், இக் குரங்கு செய்ததோடா நிற்கும். ஒரு கொசுகுகூட நம்மீது படை யெடுத்து வரத் திட்டமிடும். ஆதலால், இப்போதே அக் குரங் கைத் தேடிச்சென்று, அதனை ஏவிய அம் மனிதரை உயிர்குடித்து வெற்றிவிழா கொண்டாடாமல், நிகழ்ந்துபோனதைக் குறித்து வாய் நோவ, மனம் நோவ எதை எதையோ பேசிக்கொண்டு காலங்கடத்துவோமாயின் வலியிழந்தவராவோம்' என்று கூறி முடித்தான்.

மகோதரன்

பின்னர் மகோதரன் என்னும் மந்திரி எழுந்து, "கொற்றவரே, சேனைக்காவலன் சொல்லியது முற்றிலும் சரியே. நான் ஒன்று சொல்கிறேன், கேளுங்கள். தங்கள்முன்னே தேவர், இயக்கர், அசுரர், ஏனை உலகத்தவர், ஏன், மும்மூர்த்திகள் தானென்ன, எல்லாரும் ஒடுங்கி நிற்கின்றனர். எப்பேர்ப்பட்டவர்களாயினும், அவர்கள் உயிரைக் கவரும் கூற்றுவனுங்கூட, தங்களுக்குப் பயந்து, தங்கள் கூற்றைச் சிரமேற்கொண்டு நடந்துவருகின்றனர். வெள்ளி யங்கிரியை வேரொடு பறித்து, விடைப்பாகனேடு விண்தொட ஏந்திய வீரரே, உங்களை ஒரு அள்ளிக் குரங்கின் தோள்வலிக்கு முன்னே எள்ளுவது முறையன்று. மண்ணினும், விண்ணினும், எண்ணினும் தங்கள் கண்ணிற்படாமல் தப்புகிறவர் யாரேனு முண்டோ. அப்படியிருக்க இம் மானிடர்பால் இவ்வளவு தூரம் யோசிக்க வேண்டியது எதற்கு? மேன்மேற் பேசி ஆவதென்ன? அடியேனுக்கு அனுமதிதந்தால் உங்கள் பகையை நானே, இன்றே முடிக்கிறேன்" என்றான்.

வச்சிரதந்தன்

மூன்றாவதாக, வச்சிரதந்தன் என்னும் மந்திரி எழுந்தான். கண்கள் சிவந்தன. "இம் மனிதர்களையா ஒருபொருட்டாக எண்ணி இவ்வளவுதூரம் யோசிப்பது. இப்போதே போய் அம் மனிதரையும் குரங்குகளையும் கொன்று தின்று ஒழியுங்கள் என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டுக் கவலையற்றிருப்பதைவிட்டு இவ்வளவுதூரமா யோசிப்பது? எவ்வுலகத்திலேனும் தங்களுக்குப் பணியாத பகை வரை ஒழித்து, இவ்வடிமை செய்யத்தவறியது யாது? இவ்வேலையை என்னிடம் ஒப்புவிக்காமலிருப்பது ஏன்?" என்றான்.

துன்முகன்

நான்காவதாக, துன்முகன் எழுந்து, வச்சிரதந்தனைக் கையமர்த்தி, அரசனைப்பார்த்துச் சொல்கிறுன். "அரசே, தாங்கள் என் கண் இருக்கையில் எனக்குமுன் ஓர் எளியவன்போல் இருப்பீர் போலும். அஷ்டதிக் கஜங்களின் வலிமை, தேவர்களின் பலம், ஏன், முக்கட்சிவனுடைய கயிலைமலைதான் என்ன, இவையெல்லாம் என்ன ஆயிற்று? இப்போது இருமனிதரும் ஒரு குரங்குமே வலியுடையவர்களானுல், தங்கள் வலி வியக்கத்தக்கதேயோ! யோசிக்குமளவில் இதுபற்றி ஒரு பெரிய ஆலோசனை செய்தல் என்னும் புல்லிய தொழில் வலியற்றவர்களின் செயலேயாகும். ஒருகால் அவர்கள் வலியரே என்று வைத்துக்கொண்டாலும், அவருக்கு ஒதுங்கி வாழவும் கடவமோ? காவலரே, மனிதர், குரங்கு, கரடி என்னும் இவையெல்லாம் நம் உணவுப்பொருள்களல்லவா? நம் உணவைக் கண்டா நம் அஞ்சுவது! உணவுப்பொருள்களைக் கண்டே நாம் அஞ்சுவோமானுல், பிறகு மிகவும் யோசனைசெய்ய வேண்டியதுதான். ஐயா. ஒரு அற்பக்குரங்கு, நாம் இருக்கும் இடத்துக்கு வந்து, நம் ஊரையே எரியூட்டி மீள்வது எளிது! நாம் சென்று ஆழியைக் கடத்தல் அரிது போலும்; நம் இருப்பிடத்தின் அமைப்பு, அரண், உறுதி, சேனுபலம், பராக்கிரமம் இவற்றையெல்லாம் நன்கு தெரிந்து தப்பிப் பிழைத்துப்போனது இக் குரங்கையன்றி வேறு யாருளர்? ஆதலால் இனி ஒரு கணமுந் தாழாது அக் குரங்கும், அம் மனிதரும் இருக்குமிடத்தைத் தேடிக் கண்டு பிடித்து, அவர்களை முடிப்பதுவே சிறந்தது" என்றுன்,

மகாபார்சுவன்

ஐந்தாவதாக, மகாபார்சுவன் என்பவன் எழுந்து சொன்னுன் "என்ன, ஒரு குரங்கு வந்து நம் ஊரில் தீ வைத்துப்போயினதென்றுல், நம் பலம் அதோடு போயினதா? மனிதரால் ஏவப்பட்டு ஒரு குரங்கு வந்து கொளுத்திற்றென்று அரக்கராகிய நாம் வருந்திஞல், மேலே என் சொல்வது? வீணே பேசிக்கொண்டிருப்பதால் பயனென்? இப்போதே சென்று, அம் மனிதரையும் குரங்கையுங் கொன்று, தின்றுவிட்டல்லவா மறு யோசனை" என்றுன்.

பிசாசன்

"நடந்ததைக்கேட்டு அஞ்சினுரே நம் அரசர்! சே, நாமெல்லாம் மூலைக்கு மூலை ஒடி உயிரை விட்டுவிடுவதே நல்லது" என்றுன்

சூரியசத்துரு

"நமக்கெல்லாம் தலைவரே இப்படி அஞ்சுவராயின், மனிதரே பெரியர், நாம் சிறியர் என்றுகிறது" என்றுன்.

யக்ஞசத்துரு

"மனிதரை நினைத்து நாம் இவ்வளவுதூரம் பேசுவதென்றால் அரக்கரைத் தாழ்வுசெய்வதற்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? எனக்கு வெட்கமாயிருக்கிறதே" என்றான்.

தூமிராட்சன்

"சிவனையே எதிர்த்துப் போர் செய்வதேயாயினும், நாம் நம் ஊரைவிட்டுப் போவதென்பதை விட மோசம் எதுவுமில்லை. அவர்கள் இங்கு வந்தால் பார்த்துக் கொள்ளலாம்" என்றான்.

மற்ற மந்திரிகள்

"ஆம், ஆம், அவர்கள் இங்கு வந்தால் பார்த்துக்கொள்ளலாம்" என்றே முடிவுசெய்தனர்.

கும்பகர்ணன்

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கும்பகர்ணனுக்குப் பொங்கியது கோபம். அவன் எழுந்து பேசுகிறான் இராவணனைப் பார்த்து, "அண்ணா, இந்தச் சமயத்தில் இன்னதுதான் செய்ய வேண்டியது என்று தெரியாதவர்கள் சும்மாயிருக்கட்டும். நம் தம்பி நமக்கு இதத்தைத்தான் சொல்லுவான் என்று தாங்கள் கவனிப்பதானால் நான் சொல்கின்றேன்.

தாங்கள் பிரம்மகுலத்தில் பிறந்து, குலத்தலைவனாய் இருக்கிறீர்கள். ஆயிரஞ் சாகைகளோடு கூடிய வேதங்களை உணர்ந்தவர். தீ என்று தெரிந்தும் அது சிவப்பாயிருக்கிறதேயென்று அதை விரும்பினால் அதன் விளைவு இவ்வளவோடுதானா நிற்கும்? அழகிய கோநகர் எரிந்ததேயென்று வருந்துகிறீர்களே தவிர, கோவியல் அழிய, வேறொரு குலத்தானின் மனைவியை வலிந்து கொணர்ந்து சிறையிட்டிருக்கும் செய்கை நன்றோ? பாவிகள் அடையக்கூடிய பழி இதனின் வேறுண்டோ? தங்கள் மனைவியர் தங்களைக் காண அன்போடு காத்திருக்க, தாங்கள் அவர்களைக் கண்ணெடுத்தும் பாராது, தங்களைத் துச்சமாக எண்ணும் மாற்றான் மனைவியின் காலில் போய்விழுவது புகழ் போலும்? என்றைக்குப் பிறர் மனைவியைக் கதறக் கதறத் தூக்கிவந்து சிறையிலிட்டு அழவைத்தீர்களோ, அன்றைக்கே அழிந்தது அரக்கர் புகழ். அற்பத்தொழிலைச் செய்து, புகழை எதிர்பார்ப்பது அறிவுடைமையோ?

3. ஆசில்பர தாரமவை யஞ்சிறை யடைப்போம்
மாசில்புகழ் காதலுறு வேம்வளமை கூரப்
பேசுவது மானமிடை பேணுவது காமம்
கூசுவது மானிடரை நன்றுநம கொற்றம்.
(யு.கா.—இ.ம.ப.—52

குற்றமற்ற மற்ருெருவர் மனைவியைக் கொணர்ந்து சிறைசெய்வோம். ஆனுல் புகழை மிக மிக விரும்புவோம். வளம்படப் பேசுவது பெருமைதரு மானம்பற்றி, செய்வதோ சிறுமைதரு காமம். அஞ்சுவதோ மானிடர்க்கு. இந்த நமது வெற்றிப்பிரதாபம் இருக்கிறதே மிகமிக நன்ருயிருக்கிறது. நம் எண்ணம் ஒன்று, ஆனுல் செயல் வேறு.

4. சிட்டர்செயல் செய்திலை குலச்சிறுமை செய்தாய்
மட்டவிழ் மலர்க்குழலி ளுளையினி மன்ன
விட்டிடுது மேலெளிய மாதுமவர் வெல்லப்
பட்டிடுது மேலதுவும் நன்றுபழி யன்ருல்.''
(யு.கா.—இ.ம.ப.—53)

தாங்களோ உத்தமர்கள் செய்யும் செயலைச் செய்யவில்லை. பின்னே, குலச்சிறுமையைச் செய்துள்ளீர்கள். சரி, இப்போது சீதையைக் கொண்டுபோய் இராமனிடம் விட்டுவிட்டால் போகிறது என்ருலோ, இதைவிட மானக்கேடான காரியம் வேறெதுவும் இருக்கமுடியாது. அதைச் செய்திருக்கவேண்டிய காலத்தை நழுவ விட்டுவிட்டோம். இப்போது அவ்வம்மையாரைக் கொண்டுபோய் விடுவோமாகில், பேடிகள் போருக்கு அஞ்சி சீதையைக் கொண்டு வந்து விட்டுவிட்டார்கள் என்ற அவச் சொல்லும் பழியும் நம்மைச் சாருமே தவிர, வேறு நன்மை எதுவும் கிட்டாது. வீரத்தோடு போர்புரிந்து மாண்டேபோவோமாயினும் அதனுல் புகழே கிடைக்கும்.

இராமன் காட்டில் தனியொருவனுய் நின்றே கரனுதியரையும் பதினுயிரம் வலிமைமிக்க சேனையையும் கொன்று ஒழித்தான். இனி நம்மிடம் வருவதுதான் பாக்கி. ஐயா, அந்த மானிடரே வெல்வார் என்று வைத்துக்கொண்டாலும், அவர்களிருக்குமிடத்திற்கு நாம் வலுவிற்சென்று, அவர்களை வென்று கொல்லப் பிரயத்தனமாவது செய்யவேண்டும். இதைவிட்டு இன்னும் தாமதிப்போமானுல் அவர்கட்கு இன்னும் இதர படை பலமும், தேவர் உதவியும் வந்து ஒன்றுசேர அவகாசந் தந்ததாகும். அதற்கு இடந்தரலாகாது. நாமே விரைந்து முன்சென்று, நரர், வானரரையெல்லாம் அடியோடு ஒழியச் செய்வதுவே நமது முதற்கடமை'' என்று முடித்தான்.

இராவணன்

அது கேட்ட இராவணன். "நன்கு சொன்னாய். நான் நினைத்ததுவும் இதுவே. ஆதலால், இப்போதே படையுடன் புறப்படுவோம்" என்று போருக்கு ஆயத்தம் செய்தான்.

இந்திரசித்து

எழுந்தான் இந்திரஜித்து. தந்தையை நோக்கிப் பேசுகின்றான் "அரசே, தாங்களா இம் மானிடர்பாற் சென்று போர்புரிவது. இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் எங்கள் வீரம்தான் என்னே" என்று சிரித்து, "சிவன், பிரம்மா இவர்களெல்லாம் கொடுத்த பெரிய பாசம் முதலிய படைகளை எல்லாம் ஏந்திய பலர் இங்கிருக்க, பலர் பார்த்துச் சிரிக்க நானும் உயிருடனிருக்க, தாங்களா போகிறீர்கள் போருக்கு. மூன்று லோகமும் மும்மூர்த்தியுடன் சேர்ந்து எதிர்த்து வந்தாலும் அவர்களை எதிர்த்து முறியடித்து, தங்களுக்கு நான் வெற்றி தேடித் தரவில்லையானால் நான் தங்கள் மைந்தனல்லன். நான் பிறந்தேனும் அல்லன். குரங்குகளைக் கொன்று, போர்க்களத்தில் கவந்தங்கள் கூத்தாடச்செய்து, அவற்றைச் சீதை பார்த்து அழுது புலம்ப, அவ்விரு மனிதர் தலைகளையும் கொய்து கொண்டுவந்து காட்டுகிறேன் பாருங்கள். என் பாணங்களைக் கண்டு அக் குரங்குகளெல்லாம் பல்லை இளித்துக்கொண்டு ஓடப்போவதையும் பாருங்கள்.

5. யானையிலர் தேர்புரவி யாதுமில ரேவுந்
தானையிலர் நின்றதவ மொன்றுமிலர் தாமே
கூனமுது கின்சிறு குரங்குகொடு வெல்வார்
ஆனவரு மானுடர்நம் மாண்மையழ கன்றோ.

(யு.கா.—இ.ம.ப.—63)

அவர்களிடம் தேரா, யானையா, குதிரையா, சேனையா, அவர் என்ன தேவரா, அவர்களிடம் தவமுண்டா, 'எதுவுமில்லாத சாதாரண இரண்டு மனிதரைப் பார்த்து இவ்வளவுதூரம் யோசிக்கும் நம் ஆண்மை வெகு அழகாயிருக்கிறது.

6. நீரும்நில னும்நெடிய காலும்நிமிர் வானும்
பேருலகில் யாவுமொரு நாள்புடை பெயர்த்தே
யாருமொழி யாமைநரர் வானரரை யெல்லாம்
வேருமொழி யாதவகை வென்றலது மீளேன்.

(யு.கா.—இ.ம.ப.—64)

"இதோ பாருங்கள்; பஞ்ச பூதங்களும் நிலை குலைய அந்த நரர், வானரர்களை யெல்லாம் ஒரே நாளில் வேர் இருந்த இடமுந் தெரியாமல் செய்தாலல்லது நான் திரும்பமாட்டேன்" என்று சபதங்கூறி, தந்தையின் காலில் விழ்ந்து எழுந்து போருக்குப் போக விடை வேண்டிநின்றான்.

விபீடணர்

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த விபீடணப் பெருமானுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. பல்லை நற நறவென்று கடித்தார். நல்லவர்களிலெல்லாம் நல்லவரான அவர் சொன்னர். “ஏ பையா, முட்டாள், எல்லாவற்றையுங் கற்றுக் கரை கண்டவன்போல் பேச முன்வந்துவிட்டாயே. பின்னல் இன்னது தான் விளையப்போகிறதென்று உனக்குத் தெரியுமா? கண்ணுங் கருத்து மில்லாத ஒருவன் கையினற் சித்திரம் எழுதப் புகுவதைப் போன்றிருக்கிறது உன் பேச்சு. பெரியோர்கள் கூடிப் பேசும் சபையில் இருக்கத்தான் நீ தகுந்தவனு? முறை தெரியாதவனே, நல்லவர்கள் இருக்கட்டும் ஒரு புறம். கெட்டவர்கள்கூட நல்லொழுக்க நிலையில் நின்று தேவரைப்போல் நன்மைகளை அடைந்ததை யெல்லாம் நீ பார்த்ததில்லையா? அப்படி அவர்கள் அடைந்ததெல்லாம் மாயத்தினுலா, அல்லது வஞ்சனை, சாமர்த்தியத்தினுலா? ஆனுல், நீ தேவர்களை வென்ருய். அதுதானும் நீ முன்செய்த நற்றவத்திற்காகத் தேவர் தந்தருளிய வரத்தின் பயனல்லவா? ஏதோ புண்ணிய கர்மத்தின் பயனுல் சிறிது காலம் தேவரையும் மூவரையுங்கூட வென்ருலும் கடைசியாகத் தீமையடைவது திண்ணம்.”

“தேவரை வென்று கடைசிவரையில் நன்ருயிருந்தவரைக் காட்டு பார்க்கலாம். வினைகளை யெல்லாம் ஒழித்து வீடு கண்டவர்கள் எத்தனையோ பேர் உண்டு. அவர்களில் யாராவது தீமை புரிந்ததுண்டோ? நீ சிறு பிள்ளைத் தனத்தினுல் இப்படியெல்லாம் பேசுகிருய். சும்மாயிரு” என்று அவனை அதட்டிவிட்டு, தமையனுன இராவணனைப் பார்த்து,

“அண்ணு, தயவுசெய்து என் வார்த்தைகளை அசட்டை செய்யாமல் கேட்பீர்களாகில் எனக்குத் தெரிந்த உண்மையைச் சிறிது சொல்கிறேன். நான் ஏன் இவ்வளவுதூரம் சொல்கிறேன் தெரியுமா?

7. எந்தைநீ யாயுநீ யெம்மு னீதவ
வந்தனைத் தெய்வநீ மற்று முற்றுநீ
இந்திரப் பெரும்பத மிழக்கின் ருயென
நொந்தன ஞதலின் நுவல்வ தாயினேன்.

(யு.கா.—இ.ம.ப.—73)

"என் தந்தை, தாய், தமையன், தவத்தாற் பெறும் தெய்வம் எல்லாம் நீங்கள் தான். இந்திரனைவிட மேலான பதவியை வகிக்கின்றீர்கள். இவற்றை யெல்லாம் இழக்கப் போகின்றீர்களே யென நொந்து சொல்கின்றேன். ஆனால் ஒன்று. அடியேன் சிறியனேயானாலும், ஒன்றுமே தெரியாதவனாயினும், நான் சொல்லப் போவதைச் சற்று அமைதியுடன் முற்றிலும் கேட்கவேண்டும். இடையிடையே தடுத்துக் கெடுத்துவிடாதீர்கள். இடித்துச் சொல்லுபவர்கள் அரிது. இலாபங்கருதியோ, உயிர்க்குப் பயந்தோ எல்லாவற்றிற்கும் ஆமாம் போடுபவர்கள் நல்லவர்கள் அல்லர்."

8. கோநகர் முழுவதும் நினது கொற்றமும்
சானகி யெனும்பெயர் உலகின் றம்மனை
யானவர் கற்பினால் வெந்த தல்லதோர்
வானரஞ் சுட்டதென் றுணர்தல் மாட்சியோ

(யு.கா.—இ.ம.ப.—75)

"நமது இலங்கைமாநகர் வெந்தது, வெற்றியழிந்தது ஆகிய இவையெலாம் ஒரு குரங்கினால் முடிந்ததன்று. பின்னை எதனால் என்று கேட்பீர்களோ? உலகமாதாவாகிய சானகியாரின் கற்புத் தீயினால்."

9. எண்பொருட் டொன்றிநின் றெவரு மெண்ணினால்
விண்பொருட் டொன்றிய வுயர்வு மீட்சியும்
பெண்பொருட் டன்றியும் பிறிதுண் டாமெனின்
மண்பொருட் டன்றியும் வரவும் வல்லதோ.

(யு.கா.—இ.ம.ப—76)

"நன்கு யோசித்துப் பார்த்தால் ஒருவனின் செல்வம் முதலியன அழிவது என்றால், ஒன்று பெண்ணினால் அழியவேண்டும் அல்லது மண்ணினால் அழியவேண்டும். இவற்றையல்லாமல் வேறு என்ன இருக்கிறது."

"அண்ணா, ஒரு சொல் வழங்கிவருகின்றது. அதாவது 'இலங்கை வேந்தன் பெருந்தவமெல்லாம் ஒரு மானுட மடந்தையால் அழியப்போகிறது' என்று. அது இன்று பலிக்கப் போகிறது போலும்."

"நீங்கள் தவம் செய்து வரம் பெற்றகாலத்து மனிதர்பால் வெற்றியைக் கேட்டீர்கள் இல்லை. அதனால், ஏழு உலகங்களையும்

ஆனும் நீங்கள் ஆயிரம் தோள்களையுடைய கார்த்தவீரியார்ச்சுன னும் ஒரு மனிதனுல் தோற்கடிக்கப்பட்டீர்கள். கயிலை மலையையே அனுயாசமாகத் தலைக்குமேலே தூக்கினீர்களே, அக்காலத்து அங்கிருந்த நந்தியைக் 'குரங்கு மூஞ்சி' என்று நீங்கள் ஏச, அவர் கொடுத்த சாபத்தால் வாலி என்னும் ஒரு குரங்கினிடத்துத் தங்களுக்குத் தோல்வி ஏற்பட்டதைக் கண்டோம். வேதவதி என்னும் ஒரு தெய்வக் கற்பினளை நீங்கள் கைதொட்டு ஈர்த்து இழிவுபடுத்தியதால், அவர் அன்று சொல்லிய சொல்லின்படி இன்று சீதையாக வந்து அவதரித்திருக்கிறுர். மற்றுங் கேட்பீர்களாக.''

''இந்த மானிடர் இருவரும் யார் தெரியுமா? சொல்கிறேன் கேளுங்கள். இந்திரனை வென்று தேவலோகத்தைக் கைப்பற்றிக் கொடுங்கோல் புரிந்த சம்பராசுரனைக் கொன்று இந்திரனுக்கு அரசளித்தார் ஒப்பிலா தசரதச் சக்கரவர்த்தி. அவர் வம்சாவளி சாமான்யமானதன்று. அக் குலத்தில் காகுத்தன் என்னும் ஓர் அரசன், இந்திரனை இடபமாகக் கொண்டு, அதன் மீதேறி வெற்றி கண்டார். அதனுல் இந்த இராமபிரானுக்கு காகுத்தன் என்னும் ஒரு பெயரும் உண்டு. ஒரு காலத்தில் அராசகம் தாண்டவமாட தர்மம் குறைய, பூமாதேவி ஓடதிகளையெல்லாம் உள்ளுக்கிழுத்துக்கொண்டாள். அதனுல் பூவளமெல்லாம் குன்றி, பஞ்சம் தலைதூக்கி ஆடியது. அப்போது இவர் குலத்து பிருது என்னும் ஓர் அரசன் பூமியை அடக்கி அதனிடமிருந்து வளங்களையெல்லாம் மீண்டு வரச்செய்தார். அதனுல் பூமிக்குப் பிருதிவி என்னும் பெயர் ஏற்பட்டது. மற்றொரு சகரர் என்னும் மன்னரின் புதல்வரால் இக் கடல்தானும் தோண்டப்பெற்றது. அதனுல் கடலுக்குச் சாகர மென்னும் பெயர் உண்டாயிற்று. பகீரதன் என்னும் ஓர் அரசன் தன் முன்னோர்களை நற்கதிக்கனுப்பப் படாத பாடுபட்டு ஆகாய கங்கையைக் கொணர்ந்தார். அதனுல் கங்கைக்குப் பாகிரதி என்னும் ஒரு பெயரும் உண்டாயிற்று. அதிக முயற்சிக்கு பகீரதப் பிரயத்தனம் என்று இன்றும் வழங்கப்படுகிறது. இத்தகைய மகாவீரர்களைத் தோற்றுவித்த சூரிய வம்சத்தில் தோன்றியவர் தசரதச் சக்கரவர்த்தி. அவர் மகா சத்தியவந்தனுதலால் தன் மனைவிக்குக் கொடுத்த வரத்தைக் காப்பாற்றவேண்டித் தன் அருமந்த புதல்வனைக் காட்டிற்கனுப்ப நேர்ந்ததோடல்லாமல், புத்திர சோகத்தால் உயிரையும் நீத்து மோட்ச சாம்ராஜ்யத்தை அடைந்தார். அவர் அரசு செய்த காலத்தில் அவர் இரதமானது பத்துத் திக்குகளிலும் தங்குதடையின்றிச் செல்லும். அதனுல் அவருக்குத் தசரதர் என்ற பெயரும் நிலைத்தது.''

10. அனையவன் சிறுவரெம் பெருமவுன் பகைஞரா
லவரை யம்மா
இனையரென் றுணர்தியே லிருவரும் மொருவரு
மெதிரி லாதார்
முனைவரு மமரரும் முழுதுணர்ந் தவர்களும்
முற்று மற்றும்
நினைவருந் தகையர்நம் வினையினல் மனிதரா
யெளிது நின்ருர்.

(யு.கா.—இ.ம.ப—85)

அத்தகைய பேராற்றலுடைய சக்கரவர்த்தி குமாரர்கள் இவர்கள். இவர்கட்கு ஈடும் எடுப்பும் எவருமிலர். முனிவர், தேவர், பரமஞானிகள் ஆகியவர்களின் வேண்டுகோளின்படி, நம் தீவினையுங் கூடச்சேர நம் முன்னே இப்படி மனிதராய் வந்து நிற்கிருர்கள். அது மாத்திரமா?

11. கோசிகப் பெயருடைக் குலமுனித் தலைவனக்
குளிர்ம லர்ப்பேர்
ஆசனத் தவனெடெவ் வுலகமும் தருவனென்
றமைய லுற்ருன்
ஈசனிற் பெறுபடைக் கலமிமைப் பளவிலெவ்
வுலகும் யாவும்
நாசமுற் றிடநடப் பனகொடுத் தனபிடித்
துடையர் நம்ப.

(யு.கா.—இ.ம.ப.—86)

பிரமசிருட்டிக்கு எதிர்சிருட்டி செய்வேனென்ற கோசிக முனிவரைத் தங்களுக்குத்தான் தெரியுமே. அவர் இவ்வுலகங்களையெல்லாம் ஒருசேர ஒரு கணத்திற்போக்கும் ஆற்றல் வாய்ந்த ஆயுதங்களையெல்லாம் சிவபெருமானிடம் பெற்றதை இவர்கள் அவரிடமிருந்து பெற்றிருக்கிருர்கள். இன்னுங் கேளுங்கள்.

12. எறுழ்வலிப் பொருவினே னவுணரோ டமரர்பண்
டிகல்செய் காலத்து
உறுதிறற் கலுழன்மே லொருவனின் றமர்செய்தா
னுடைய வில்லும்
தெறுசினத் தவர்கள்முப் புரம்நெருப் புறவுருத்
தெய்த வம்பும்
குறுமுனிப் பெயரினு னிறைதவர்க் கிறைதரக்
கொண்டு நின்ருர்.

(யு.கா.—இ.ம.ப.—87)

கருடன்மேலேறி அரக்கர்களையெல்லாம் தனித்துநின்றே கொன்ற மகாவிஷ்ணுவின் வில்லையும், திரிபுரமெரித்த சிவபெருமானின் அம்பையும் அகத்திய முனிவர் கொடுக்கப் பெற்றுள்ளவர்கள். மேலும்,

13. நாவிஞ லுலகைநக் கிடுவதிக் களவிடற்
குரிய நாளும்
மேவுதி விடமுயிர்ப் பனவெயிற் பொழிபெயிற்
றனவ வீரர்
ஆவமா மரியபுற் றுறைவமுற் றறிவருக்
கழிவு செய்யும்
பாவகா ரியருயிர்ப் பதமலா லிரைபெரு
பகழி நாகம்.

(யு.கா.—இ.ம.ப.—88)

"அவர்கள் கையிலுள்ள அம்புகளாகிய நாகங்கள் உலகங்களையெல்லாம் நக்கி ஒழிப்பவை. திக்குகளையெல்லாம் அளப்பவை. விஷத்தை உமிழ்பவை. ஒளியை உமிழ் பற்களையுடையவை. அவ் வீரருடைய அம்புப்புட்டிலாகிய புற்றிலே வாழ்பவை. அறிஞரான பெரியோர்க்குக் கேடுபுரிகின்ற பாவிகளின் உயிராகிய உணவேயல்லாமல் வேருேரிரையைப் பெருதவை."

"அவர்கள் கைக்கொண்டிருக்கும் விற்கள் அவர்களாலன்றி வேறெவராலும் அசைக்கவும் முடியுமோ? நம்முடைய விற்களைப் போல் நாணியும் வலியும் ஒருநாளும் பலங்குன்ரு. நம் விற்கள் பெரியனவேயானுலும் அவர்கள் விற்களைச் சிதைக்கும் ஆற்றல் உள்ளனவாமோ? அவை கற்பகவிருக்ஷமா? மூங்கிலா? உலகினைத் தாங்கும் மேருவா? இவை எவையுமல்ல. பின்னர் என்னவென்ருலோ, உலகத்திலுள்ள பெரிய மலைகளெல்லாம் ஒன்று சேர்ந்து ஆனவை. இராமனது ஒரே பாணத்தால் பாற்கடலைக் கடைந்த வாலியின் மார்பின் பலம் ஒடுங்கிற்று. உலகை மூடிக்கொண்டிருந்த மராமரங்கள் ஏழும் ஒடுங்கின. கரனுதியோர், விராதன் முதலியோரின் மலையொத்த தலைகளெல்லாம் அறுந்து வீழ்ந்தன. இனிப் போர் ஏற்படுமாயின் பகைவர் கூட்டமே இல்லாதொழிவதல்லாமல் பகை எதுவும் எஞ்சி நிற்குமோ"?

"சாபானுக்கிரக முனிசிரேட்டர்களும், இவ்விருவரே உலகங்களையெல்லாம் நிச்சயம் வெல்வர் என்று தெரிந்தல்லவா அவரை வந்து சரணடைந்துள்ளார்கள். இது அரக்கர்கட்கெல்லாம் தெரிந்த விஷயந்தான். ஆனுல் அவர்கள் நம்மிடம் நெருங்கி வந்து சொல்லப் பயந்து, தூக்கம் பிடிக்காது கலங்கிக்கொண்டிருக்

கிறுர்கள். தேவர்களோ, நஞ்சுண்டார் சாவது நிச்சயம் என்ற திடநம்பிக்கையினுல், நமக்கு முன்போல் இப்போது அஞ்சு கின்றிலர். பகற்காலச் சந்திரன்போல் ஒளிகுன்றியிருக்கும் அவர் கள் முகங்களெல்லாம் இப்போது சரற்காலச் சந்திரன்போல் ஒளிவீசுகின்றன. கடல் சூழ்ந்த இவ்வுலகுக்கு வெகு தூரத்திற் கப்பால் போய் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு வருந்து பவராகிய யமன் முதலோரான தேவர்களும், முனிவர்களும் மற்றுமுள்ள யட்சர், கின்னரர் முதலிய தேவகணத்தாரும் சந்தி ரனைப் போன்ற அழகிய முகமுடைய சீதாதேவி நம் இலங்கை யில் சிறைப்பட்டு உள்ளாளென்பதைக் கேள்விப்பட்டவுடனே அச்சமற்றவராய் இங்கு வந்து நம் ஊரையும், வாழ்க்கையையும் அடிக்கடி சுற்றிப் பார்த்துப் போவராயுள்ளனர்.

"அன்றியும் என்றும் காணுத துர்நிமித்தங்கள் பல புலனு கின்றன. தேவாசுரர்கள் விட்டுச் சென்ற யானை, குதிரைகள் நம் மனைகளுக்குள் வலக்காலை முன்னதாக எடுத்துவைத்து நுழை கின்றன. அரக்கர் வாய்களும் பற்களும் வறண்டு உதிர்கின்றன. பேயினும் பெரிய நரிகள் நம் நகரில் தாராளமாகச் சஞ்சரிக்கின் றன. கோதையர் குழலும், நம் குஞ்சியும் காரணமின்றி வெந்து வீழ்கின்றன. தேவர்களையெல்லாம் வென்ற கர, தூஷண, திரி சிரசாதிகளும், வாலி, மாரீசன் என்பவரும் இராமபாணத்தினு லேயே மாண்டொழிந்தனர். ஆதலால் மூவரும் இவருக்கு ஈடாகார் என்பவராயிருக்கின்றனர். இன்னும் இவ்விரு வீரருக்குத் துணைநிற்கும் வானரர்களெல்லாம் யார் தெரிமா? நம் பகைவர் களான தேவர்களே. மாறுவேடத்தில் மறைந்து நிற்கின்றனர். ஆதலால், நாம் போர் புரிய நினைப்பது நல்லதன்று. நமக்கு வெற்றி யென்பதும் கிட்டாது. ஆதலால்,

14. இசையுஞ் செல்வமும் உயர்குலத் தியற்கையு மெஞ்ச
வசையுங் கீழ்மையு மீக்கொளக் கிளையொடு மடியாது
அசைவில் கற்பினவ் வணங்கைவிட் டருளுதி யதன்மேல்
விசைய மில்லெனச் சொல்லின னறிஞரின் மிக்கான்.

(யு.கா.—இ.ம.ப.—99)

நம்புகழ், செல்வம், உயர்குலப் பண்பு இவையெல்லாம் ஒழியாமல், தாழ்ச்சியும் அபகீர்த்தியும் அதிகரிக்காமல், சுற்றமும் மடியாமல் இருக்க வேண்டுமானுல், கற்புத்தெய்வமாம் சீதையை விட்டுவிடுவதொன்றே வழி. இதற்குமேல் நமக்கு வெற்றி வேறில்லை" என்று கூறி முடித்தான் விபீடணன்.

இராவணன்

இதனைக்கேட்டான் இராவணன். அவ்வளவுதான். கைகளொடு கைகள் பொத்தின. கோரைப்பற்கள் தெரிய வாய்கள் பிளந்தன. தீப்பொறி கக்கக் கண்கள் சிவந்தன. இரத்திஞபரணங்களும், மார்பும், தோள்களும் குலுங்கச் சிரித்துச் சொல்வாஞயினுன்.

"ஐயா, நீ நல்ல உறுதிகளைச் சொல்வதாகச் சொன்ஞய். ஆஞல் பித்தர் சொல் பிதற்றிஞய். அவர்கள் வெல்வர் என்ருய். இப்படியெல்லாம் நீ சொல்லியது அவர்க்கு அஞ்சியா? அல்லது அவர்பால் அன்பு பூண்டா? மானிடரை வெல்ல வரமில்லை என்ருய். இருக்கட்டும். சிவபெருமானை மேருமலையோடு பெயர்த்து மேலே தூக்க வரமுண்டோ? அட்டதிக்கு கஜங்களைப் பின்னுக்குத் தள்ள வரமுண்டோ? யோசிக்காமல் வெற்றுரை வழங்கிஞய். தேவர்கள் சுயரூபத்தோடு, கோபத்தோடு கூட்டிய படைகளெல்லாம் என்ன செய்தன. அது போகட்டும். என்னேடு பிறந்த உனக்குத்தான் அம் மானுடர் வலியராவரோ? நீ என்ன பேசுகின்ருயென்றே உனக்குத் தெரியவில்லையே. தேவர்கள் எத்தனையோமுறை தோற் ருேடிப்போயினர். பேருக்கு ஒரு முறையாவது எதிர் நின்றனரா? அவர்கள் என்னையும், என்னைச் சார்ந்தவர்களையும் கொல்வரென்று சொல்லுதலும் பொருந்துமோ? தேவர்களிடம் யான் வரம் பெற் றேன் என்ருய். ரிஷபாரூடஞன சிவனையும், சக்கராயுதஞன விஷ்ணுவையும் தோற்கடித்தேனே. அவை எவ் வரத்தால். நந்தி யின் சாபத்தால் எனக்குக் குரங்கால் கேடு நேரிட்டது என்ருய். நம்மைச் சபிக்காதவர் யாராவது உண்டா? இந்திராதியர், சித்தர், இயக்கர் முதலியவர்களுள் நமக்கு இறுதி சிந்திக்காதவர்கள் யார்? அந்தச் சாபங்களெல்லாம் என்ன பண்ணின? வாலி சிவபெருமா னிடம் பெற்றிருந்த வரத்தை நான் அறியாததால் அவனிடம் தோற்கும்படியாயிற்று. ஆதலால், எல்லாக் குரங்குகளிடமுமா தோற்பேன்? சிவனேயாஞலும், மாலேயாஞலும் வாலி முன் நின்று போர்தொடுத்திருந்தால், அவர்கட்கும் என் கதிதான் கிட்டி யிருக்கும். அது தெரிந்துதான் அம் மனிதன் மறைந்து நின்று வாலியைக் கொன்ருன். அவன் பராக்கிரமங்களையெல்லாம் அடுக்கு கிருயே. அவன் என்ன செய்துவிட்டான்?

15. ஊன வில்லிறுத் தோட்டைமா மரத்துளம் போட்டிக்
கூனி சூழ்ச்சியா லரசிழந் துயர்வனங் குறுகி
யானி ழைத்திட இல்லிழந் தின்னுயிர் சுமக்கும்
மானு டன்வலி நியலா லாருளர் மதித்தார்.
(யு.கா.—இ.ம.ப.—109)

" முரிந்தவில்லை முரித்தான். ஓட்டை மரத்தை ஓட்டை பண்ணினான். ஒருவேலைக்கார கூனியின் சூழ்ச்சியால் அரசிழந்தான். காட்டில் அலைந்து திரிந்தான். என் சூழ்ச்சியால் பெண்டிழந்தான். ஆயினும் இன்னும் உயிர்சுமந்து நிற்கின்றான். இந்தக் கோழையை, மானங்கெட்டவனை நீதான் புகழலாம். உன்னைத்தவிர வேறு யார் புகழ்வார்?" என்றெல்லாம் பலவாறு இழித்துக்கூறி, " சரி, இதோ நான் புறப்படுகிறேன் போருக்கு" என்று சொல்லிப் புறப் பட்ட தமையனும் இராவணனுக்கு மேலுங் கூறுவானாயினான் விபீடணன்.

விபீடணன்

16. தன்னின் முன்னிய பொருளிலா வொருதனித் தலைவன்
அன்ன மானுட னாகிவந் தவதரித் தமைந்தான்
சொன்ன நம்பொருட் டும்பர்தஞ் சூழ்ச்சியின் துணிவால்
இன்ன மேகுதி போலுமென் றடிதொழு திரந்தான்.
(யு.கா.—இ.ம.ப.—111)

" தனக்கு மேம்பட்ட பொருள் எதுவுமில்லாத தனிப்பொரு ளாகிய கடவுள், தேவர்களின் ஆலோசனையின்பேரில் நம்மைக் கொல்வதற்கென்றே மனிதனாக வந்து அவதரித்துள்ளார். இன்னும் அவரை எதிர்த்துப் போருக்குப் போவாய் போலும்" என்று அடிதொழுது நின்றான் விபீடணன்.

இராவணன்

" ஓ, அவன் திருமாலே என்கிறாயா ? அத் திருமால் வலியற்றவ னாய் என்னிடம் எத்தனையோ முறை தோற்றுப் போகவில்லையா? நான் இதுவரையில் எத்தனையோ போர்கள் செய்திருக்கிறேனே. அப்போதெல்லாம் அவற்றைப் பார்த்துக்கொண்டு மூச்சற்றுக் கிடந்தானே அவன்? இந்திரனைச் சிறையிட்டேனே, அட்டதிக்கு கஜங்களின் கொம்புகளை ஒடித்தேனே, அவனையே பலமுறை துரத்தியிருக்கிறேனே, தேவர்களையெல்லாம் அடித்துச் சின்னா பின்னமாகச் சிதறி ஓடச்செய்தேனே, அப்போதெல்லாம் அவன் சின்னவனாயிருந்தானோ ? சிவன், மால், பிரம்மா, தேவர் எல்லாரையும் அடக்கி, மூன்று லோகங்களையும் ஆண்டுகொண்டிருக் கின்றேனே. இதுவரையில் இவன் இந்தமனித உருவங்கொள்ளாத தினாலா அல்லது பலமில்லாததினாலா என்னை ஒன்றும் செய்யவில்லை?

ஆயிரம் தோள், ஆயிரம்தலை இப்படியாகக் கொண்ட நெடுமால் அவ்வுருவம் சிறிதென எண்ணி இப்போது இந்தப் பெரிய மனித உருவம் எடுத்துக்கொண்டு என்னை எதிர்க்க வந்திருக்கிறானோ? பித்தனும் சிவனும், எத்தனும் மாலும் எனக்குப் பயந்து ஓடிய போது அவர்கள் ஏறிச்சென்ற ரிஷபம், கருடன்மேல் தைத்த அம்புகள் இன்னும் அவ்வுடம்புகளில் புதைந்து கிடக்கின்றன. ஆதலினாலே,

17. வெஞ்சி னந்தரு போரினெம் முடனெழ வேண்டா
இஞ்சி மாநக ரிடமுடைத் தீண்டினி திருத்தி
அஞ்ச லஞ்சலென் றருகிருந் தவர்முகம் நோக்கி
நஞ்சின் வெய்யவன் கையெறிந் துருமென நக்கான்.
(யு.கா.—இ. ம.ப.—117)

"கொடிய கோபத்தோடு விளைகின்ற போரில் நீ வரவேண்டா. இந்த மதிள் சூழ்ந்த பெரிய நகரம் விசாலமான இடமுடையது. இங்குத்தானே இனிது தங்கியிருப்பாய்; அஞ்சவேண்டா" என்று விபீடணனுக்குச் சொல்லிவிட்டு, அங்கிருந்தவர்களின் முகத்தைப் பார்த்து, நஞ்சினும் கொடியவனான இராவணன் கைதட்டி இடிபிடித்தாற்போல் ஏளனச் சிரிப்புச் சிரித்தான்.

விபீடணன்

எனினும் விபீடணன் பின்னும் அவனை நோக்கி, ஐயனே, தங்களைவிடப் பன்மடங்கு பலசாலிகளான நம்முன்னோர்கள் முற்காலங்களில் இத்திருமாலை எதிர்த்து மாண்டவர்கள் பலர். அவர்களுள் இரணியகசிபு என்பவன் ஒருவன். அவன் எத்தகையன் தெரியுமா?

18. வேதங் கண்ணிய பொருளெலாம் விரிஞ்சனே யீந்தான்
போதங் கண்ணிய வரமெலாந் தரக்கொண்டு போந்தான்
காதுங் கண்ணுதல் மாலயன் கடைமுறை காணாப்
பூதங் கண்ணிய வலியெலா மொருதனி பொறுத்தான்.
(யு.கா.—இ.வ.ப—1)

"அந்த இரணியகசிபு வேதங்களையெல்லாம் பிரம தேவனே கற்பிக்கக் கற்றவன். அந்த பிரம தேவனிடமே வேண்ட வரங்களையும் பெற்றவன். அயன், மால், அரன் என்ற மூவரும் எல்லை காணாத பஞ்ச மகா பூதங்களிடத்தும் பொருந்தியனவுமான வலிமைகளை யெல்லாம் தானொருவனே தாங்கப் பெற்றவன்.

ஆதலால், இந்த அண்டம் ஒன்றினிலே மட்டுமன்று. இன்னும் புற அண்டங்களிலும் தன் பெயரையே யாவரும் மந்திரமாகச் சொல்லச்சொல்லி வாழ்ந்தவன். அட்ட திக்கு கஜங்களை, இரண்டை இரண்டு கரங்களால் பிடித்து, ஒன்ருேடு ஒன்றை மோதவிட்டு வேடிக்கைப் பார்ப்பான். ஏழு சமுத்திரமும் அவனுக்குக் கணுக் கால் ஆழந்தான். அவன் ஸ்நானம் செய்ய ஆற்று நீர் போதாது, மேகநீரில் குளிர்ச்சி இல்லே, சமுத்திர நீரோ உப்புமயம் ஸ்நானத் திற்கு உதவாது என்று கூறி இந்த அண்டத்தில் ஒரு பொத்தல் போட்டு இதற்கப்பாலுள்ள பெரும்புறக் கடல் நீரில் நீராடுவான். ஸ்நானம் முடிந்த பிறகு நாகலோகஞ் சென்று நாக கன்னியரால் உபசரிக்கப்பெற்று உணவு கொள்வான். பகற்பொழுதை தேவ லோகத்திற் கழித்து, இரவில் பிரம்ம லோகத்தில் கொலு வீற் றிருப்பான். சந்திரனதுவிமானத்திலேறி அவனது அதிகாரத்தைத் தானே செலுத்துவான். சூரியன் தேரிலேறிச் செலுத்திச் சூரியன் அதிகாரத்தைத் தான் மேற்கொள்வான். அட்ட திக்குப் பாலகர்களினுடைய பீடங்களிலிருந்துகொண்டு அவர்கள் தொழில்களையும், பிரம்ம லோகத்திலிருந்துகொண்டு பிரம்மா வின் தொழிலேயும் புரிவான். காத்தற் கடவுளாகிய திருமாலின் பெயரை யாரும் மறந்துகூடச் சொல்லக் கூடாது. தானே கடவுளென்றும், அதனுல் மும்மூர்த்திகளும் தன் பெயரையே ‘இரணியாய நம:’ என்று இரணியனின் புரோகிதரிடம் கேட்டுத் தெரிந்து, அவர் சொல்கிறபடி சொல்லியாக வேண்டும். வேதங்கள்கூட அவன் பெயரைத்தான் சொல்லவேண்டும். அவிர்ப்பாகங்களை எல்லாம் அவனுக்கே தருதல் வேண்டும். இவனே கடவுள் என்ருல் வேறே என்ன சொல்லக் கிடக்கிறது. இப்படியாக ஆணை செலுத்தி வந்தான். யாரும் யோகம், தவம் முதலியவற்றைச் செய்தல் கூடாது. இப்படியாக இரணிய பரி பாலனம் நடைபெற்றது.

அவன் பெற்றிருந்த வரங்களோ அளவில. பெண்ணுல், ஆணுல், அலியால் இறக்கக் கூடாது. கண்களாற் காணப்படும் பொருள்களாலும், மனத்தாற் கருதப்படும் பொருள்களாலும் மரணம் கூடாது. தேவர்களாலும், மூவராலும் மரணம் கூடாது. நீரில், நெருப்பில், காற்றில், கீழ், மேல் உள்ள எந்த உலகத் திலும் மரணம் கூடாது. தேவர் முனிவர் சாபங்கள் இவ னிடம் செல்லா. வீட்டின் உள்ளே, வெளியே, ஆயுதங்களால், இரவில், பகலில், யமனுல், பஞ்ச பூதங்களினுலியன்ற வத்துக் களால், வேதமந்திரங்களால், உயிர் போகக் கூடாது என்று வரம் பெற்றிருந்தான். இவனுக்கு ஒரு நல்ல பிள்ளை பிறந்தது.

அவன் பெயர் பிரகலாதன். அவன் அறிவுடையோரினும் அறிவுடையோன். பரிசுத்தரினும் பரிசுத்தன். தருமவொழுக்கத் தலைவன். தாயைக் காட்டிலும் சர்வ பிராணிகளிடத்தும் அன்புடையவன். கல்வி கற்கும் வயதும் வந்தது. அப் பையனுக்கு வேதங்களைப் போதிக்க ஒரு பிராமணனை நியமித்தான். அந்தகுரு சுக்கிராச்சாரியார் என்பர் சிலர். இல்லை, அவர் மகன் சண்டமார்க்கன் என்பர் சிலர். யாராயினும் ஆகுக. வேதம் கற்பிக்க வந்த குரு, பிரகலாதனைப் பார்த்து மிகவும் அன்புடன், 'அப்பா, வேதங் கற்கத் தொடங்குமுன் உன் தந்தையின் பெயரை முதலிற் சொல்' என்ருன். அச் சிறுவன் காதுகள் இரண்டையும் கைகளினுற் பொத்திக்கொண்டு, 'ஆசாரியரே, தாங்கள் சொல்வது சரியன்று, வேதோபநிடதற்களிற் கூறப்படும் கடவுள் பெயரையல்லவா சொல்ல வேண்டும்' என்ருன். "ஓம் நமோ நாராயணுய" வென்று கூறி, சிரமேற் கை குவித்து, மனங்கரைந்து, கண்களில் நீர் ததும்ப, மயிர்க்கூச்சலிட, குரு பிரமிக்குமாறு அசைவற்றிருந்தான். குரு இரணியனுக்குப் பயந்து அப்படிச் சொல்லக் கூடாதென்று என்னென்னவோ சொல்லிப் பார்த்தார். பையன் அந்நாமத்தையே திரும்பத் திரும்பச் சொன்னுன். அப்படிச் சொல்வதுதான் நியாயம் என்று பல விளக்கங்களுந் தந்தான்.

குரு

தன்னுல் ஒன்றும் செய்யமுடியாது போகவே, குரு இரணியனிடம் ஓடோடியும் வந்து, 'எனக்கு இம்மை, மறுமைப் பயன்களைக் கருதிச் சொல்லுதற்கும், நினைப்பதற்கும் தகுதியற்ற வார்த்தைகளைச்சொல்லிக்கொண்டு, தங்கள் பெயரைச்சொல்லவும் மறுத்து, வேதங்களையும் கற்பானில்லை குழந்தை' என்று அடங்கி ஒடுங்கி முறையிட்டார். அது என்ன வார்த்தை என்று இரணியன் கேட்க, 'அச் சொல்லை நான் சொன்னுல் உடனே நான் நரகத்தைத்தான் அடைவேன், என் நாவும் வெந்து அழியும்' என்ருன்.

இரணியன்

அதனுல் ஏவலாளரை அனுப்பித் தன் மைந்தனை வரவழைத்தான் இரணியன். மைந்தன் வந்து தந்தையைத் தொழுதான். மகனை மார்புறத் தழுவி உச்சிமோந்து, "மைந்தா, குரு வெறுக்கும்படியான சொல்லைச் சொன்னுயாமே, அது என்ன சொல், சொல் பார்க்கலாம்" என்ருன்.

பிரகலாதன்

19. காமம் யாவையும் தருவது மப்பதம் கடந்தாற்
சேம வீடுறச் செய்வதுஞ் செந்தழல் முகந்த
ஓம வேள்வியி னுறுபத முய்ப்பது மொருவன்
நாம மன்னது கேள்நமோ நாராய ணுய.

(யு.கா.—இ.வ.ப.—42)

விரும்பிய புருடார்த்தங்களை யெல்லாம் கொடுப்பதும், அந்தத் திரிவர்க்கத்தின் நிலையைக் கடந்துவிட்டால் அழிவில்லாத அபவர்க்கமாகிய மோட்சத்தை அடையச் செய்வதும், செந்நிறமுள்ள அக்கினியிலே மொண்டு சொரியும் ஓமத்தையுடைய யாகங்களினுல் அடையப்படும் சுவர்க்க முதலிய போகஸ்தானங்களில் அடைவிப்பதும், ஒப்பற்ற எம்பெருமானது திருநாமமாம். அத்திருநாமத்தைக் கேட்பீர்களாக. அதுதான் 'நமோ நாராயணுய' என்பது.

20. மண்ணி னின்றுமேல் மலரய னுலகுற வரமும்
எண்ணில் பூதங்கள் நிற்பன திரிவன விவற்றின்
உண்ணி றைந்துள கரணத்தி னூங்குள வுணர்வும்
எண்ணு கின்றதிவ் வெட்டெழுத் தேபிறி தில்லை.

(யு.கா.—இ.வ.ப.—43)

பூலோகம் முதல் எல்லாவுலகங்களுக்கும் மேலதாகிய பிரம்மதேவனது சத்தியலோகமளவும் பொருந்தி வாழ்கின்ற அளவில்லாத சராசரப் பொருள்களின் அறிவும் நினைக்கின்றது இவ் அஷ்டாக்ஷரமேயாம். இதைப் போன்றது வேறு எதுவும் இல்லை.

21. முக்கட் டேவனும் நான்முகத் தொருவனு முதலா
மக்கட் காறுமிம் மந்திர மறந்தவர் இறந்தார்
புக்குக் காட்டுவ தரிதிது பொதுவுறக் கண்டார்
ஒக்க நோக்கின ரல்லவ ரிதனிலை யுணரார்.

(யு.கா.—இ.வ.ப.—44)

சிவன், பிரம்மா முதலாகச் சாதாரண மனிதர்கள் வரை இந்தத் திருமந்திரத்தை மறந்தவர்கள் இறந்தவரேயாவர். இதன் மகிமை விவரித்துக் காட்டுதற்கு அருமையானது. ஞானிகள் இதன் பெருமையைக் காண்பர். பிறர் இதனை அறியமாட்டார்கள்.

22. தோற்ற மென்னுமத் தொல்வினை தொடுகடற் சுழிநின்று
ஏற்று நன்கல னருங்கலன் யாவர்க்கு மினிய
மாற்ற மங்கல மாதவர் வேதத்தின் வரம்பின்
தேற்ற மெய்ப்பொருள் தெரிந்தமற் றிதினில்லை சிறந்த.
(யு.கா.—இ.வ.ப.—45)

பழவினைச் சுழியினின்று கரைசேர்ப்பதும், விளக்கத்தைச் செய்வதும், இனிய மங்கலச் சொல்லாக வுள்ளதும், பெருந் தவசிகளாற் பாராட்டப்படுகின்ற வேதங்களின் எல்லையாகின்ற உபநிஷத்துக்களின் சித்தாந்த தத்துவப் பொருளுமாக அறியப்பட்ட இத் திருமந்திரத்தைக் காட்டிலும் சிறந்தது எதுவுமில்லை.

23. உன்னு யிர்க்குமென் னுயிர்க்குமிவ் வுலகத்தி னுள்ள
மன்னு யிர்க்குமீ துறுதியென் றுணர்வுற மதித்துச்
சொன்ன திப்பெய ரென்றன னறிஞரிற் றூயோன்
மின்னு யிர்க்குவே லிரணியன் றழலெழ விழித்தான்.
(யு.கா.—இ.வ.ப.—46)

இந்தத் திருநாமம் தங்கள் உயிருக்கும், எனது உயிருக்கும், இவ்வுலகத்திலுள்ள எல்லா உயிர்கட்கும் மேலான உறுதியை விளைப்பது என்று அறிவிற் சிறந்த பிரகலாதன் கூறினுன்.

இரணியன்

அதைக் கேட்ட இரணியன் கண்களின் தீப்பொறி பறக்கக் கோபமுற்றுப் பார்த்து, 'உலகில் யாரும் என் பெயரன்றி வேறு பெயரை மனத்திலும் நினையார். என் திறம் தெரிந்து மூவரும், யாவரும் என் நாமமே புகல்வர். எனக்கு அடங்கியே நடப்பர். நீ இதை யாரிடம் கற்ருய்? நீ சிறுபிள்ளை. இனி யாவது குருவார்த்தையை மதித்து அதன்படி நட. நான் உன்னை மன்னித்தேன் இம் முறை" என்ருன்.

பிரகலாதன் மீண்டும் அஷ்டாக்ஷரத்தின் மகிமையை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் இரணியன் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக தன் மைந்தனைச் சத்துருவாக நினைத்து, அவனைக் கொல்ல எத்தனை எத்தனையோ உபாயங்களைக் கையாண்டான்.

உபாயங்கள் பயனற்றனவாயின

ஆயுதங்கள் பயனற்றனவாயின. அக்கினி எரிக்கவில்லை. அனந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தக்ஷகன், பதுமன், மகாபதுமன், வாசுகி என்னும் எட்டு நாகங்களும் தீண்ட முடியாதன ஆயின. ஐராவதம் என்னும் இந்திரனது யானை அவனை வலம் வந்து வணங்கிப் போயிற்று. பிறகு அசுரர் கொடுமையால் அந்த ஐராவதம் பிரகலாதனைத் தாக்கியது. ஆயினும் அதன் நான்கு கொம்புகளும் வாழைத்தண்டுபோல் துவண்டு,வளைந்து ஒடிந்தன. பின்னர் மலையிற் கட்டி சமுத்திரத்தில் உருட்டினர். அது சுரைக் குடுவையைப்போல் வெள்ளத்தில் மிதந்தது. விஷத்தை அருத்தினர். அது கொல்லவில்லை. ஆனால் அது அமுதமாயிற்று. அவனை அடித்த அடிகள் ஒன்றும் அவன்மேற் படவில்லை.

இரணிய பிரகலாத சம்வாதம்

இ : (பிரகலாதனிடம் வந்து) 'நீ சொல்பவன் யாண்டுள்ளான்'?

பி : 'எங்கும் நிறைந்துள்ளான்'

இ : "இத் தூணில் உள்ளானோ"?

பி : "நீ தொட்ட தொட்ட இடங்களில் எல்லாம் உளன்."

இ : "இல்லையானால், உன்னை நானே கொன்றுவிடுவேன், தின்று விடுவேன்."

பி : "இல்லையானால் நீ என்னைக் கொல்லவேண்டியதில்லை. என் உயிரை நானே மாய்த்துக்கொள்வேன். அப்படிக் கின்றி பின்னும் உயிர்வாழ்வேனாகில் நான் அப் பெருமானின் அடிமை அன்று." என்று பிரதிக்ஞை செய்தான்.

அது கேட்ட இரணியன் அத் தூணில் அறைந்தான். உள் இருந்து ஒரு சிங்கம் கர்ச்சித்தது. அக் கர்ச்சனையைக் கேட்டதும் பிரகலாதன் ஆனந்த பரவசனாயினான். இரணியன், "யாரடா சிரித்தது? போர் செய்வாயாயின் புறப்படு வெளியே?" என்றான். உடனே தூண் பிளந்தது. நரசிம்மமூர்த்தி வெளியே வந்தது விசுவ ரூபத்தில்.

இரணியன் சேனையில் எத்தனை பேர்களிருந்தார்களோ அத்தனை பேரையும் ஒவ்வொரு கை பற்றிக் கொண்டது. அப்படியானுல் கைகள் எத்தனை என்பதை மனத்தால் எண்ணிப் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். எல்லோரையும் கொன்ருயிற்று. எஞ்சி நின்றவன் இரணியன் ஒருவனே.

இரணியன் வாள், கேடகம் முதலாயின ஏந்திப் போருக்கு ஆயத்தமாய் நின்ருன். அப்போதுகூட,

பிரகலாதன்

பிரகலாதன் தந்தையை நோக்கி, தந்தையே, இக் கடைசி நேரத்திலாவது பெருமானை வணங்கி மன்னிப்புக் கேளுங்கள், கட்டாயம் மன்னிப்பார்" என்ருன்.

இரணியன்

நான் போர் புரிந்து, அவனையும் உன்னையுங் கொன்று, பின்னர் என் வாளுக்கு வணங்குவேனே தவிர வேறு செய்யேன்'' என்று வீர சபதங்கூறி நரசிங்கப் பெருமானை அனுகினுன்.

நரசிங்கப் பெருமான்

பரமன் பல்லாயிரங் கரங்கொடு அவனைப் பற்றினுன். இருவரும் சற்றுப் பொருதனர்.

போரின் தோற்றம்

அக் காட்சி எப்படியிருந்ததென்ருல், இரணியன் ஒரு மேரு கிரியையும், அவனைப் பற்றிய பரமன் கைகள் உலகிலுள்ள எல்லா மலைகளையும் போன்றன. நரசிங்கப் பெருமான் இரணியனின் இரண்டு கால்களையும் பற்றிச் சுழற்றி, கூரிய நகங்களால் அவன் மார்பைக் கிற, உதிர வெள்ளம் உலகமெல்லாம் பரந்தது. அவன் பெற்றிருந்த வரத்திற்கேற்ப அந்திமாலை நேரத்தில், தலைவாயிற் படியின்மேல், தன் தொடைமீது வைத்துக் கொண்டு கூரிய நகங்களால் அவன் மார்பைப் பிளந்து, இரத்த வெள்ளம் பெருக, அவன் உயிரைப் போக்கி, தேவர்களின் துயரத்தைத் துடைத்தார். அப்போது நரசிங்கத்தின் உக்கிரகத்தைப் பார்த்த தேவர் முதலியோர் நடுங்கினர். பிரம்மா தோத்திரம் செய்தார். நரசிம்மத்தின் கோபம் தணிந்தபாடில்லை. ஆதலால் அக் கோபந் தணிய பெரிய பிராட்டியாகிய இலக்குமி தேவியை அவரருகே போகும்படி பிரார்த்தித்தனர், இலக்குமி அவரை

அனுகியவுடன், பெருமானின் உக்கிரகம் ஒருவாறு தணிந்தது. பிரகலாதனிடத்து அன்பினால் அவனை நோக்கி உன் குலத்து உதிப்பவர்கள் என்ன குற்றம் செய்தாலும் உனக்காக நாம் அவர்களைக் கொல்லமாட்டோம். நாம் உனக்குச் செய்யவேண்டிய உதவி ஏதேனும் உளதாயின் சங்கோசப் படாமல் விரைவிற் கூறுவாய் என்ன, பிரகலாதன் பெருமான் முன் நின்று, ஒரு வரம் வேண்டினான்.

பிரகலாதன் வரம் வேண்டுதல்

24. முன்பு பெறப் பெற்ற பேறோ முடிவில்லை
பின்பு பெறும்பேறு முண்டோ பெறுகுவனேல்
என்பு பெறாத விழிபிறவி யெய்தினுநின்
அன்பு பெறுகை யரும்பே றெனக்கென்றான்.
(யு.கா.—இ.வ.ப.—169)

“பிரபுவே, உன்னிடம் யான் பெற்ற பேறுகளுக்கு ஓர் அளவு இல்லை. இன்னும் யாதேனும் நான் பெறவேண்டுமாயின் எலும்பில்லாத ஒரு புழுவாய்ப் பிறந்தாலும் நின்பால் பக்தி செய்தலே யான் வேண்டும் வரம்” என்றான்.

நரசிங்கப்பெருமான் அது கேட்டு மிக மகிழ்ந்து, “பஞ்சபூதங்களெல்லாம் அழிந்தாலும் நீ அழியாமல் என்னைப்போல் என்றும் இருப்பாயாக. மூன்றுலகிலுமுள்ள எல்லாரும் என்னைத் துதித்துப் பெறவேண்டியவற்றை யெல்லாம் உன்னைப் பிரார்த்தித்த மாத்திரத்திலேயே பெறுவார்களாக. எனக்கு அடியவர்களானவர்கள் எல்லோரும் உனக்கும் அடியவர்களே. ஆதலால் நீ அசுரர்கட்கு மாத்திரம் அரசனல்லன். தேவர்கட்கும் அரசனாகிறாய்”.

சிறப்பான தானம், தருமம், நால்வேதம், கருணை, தத்துவ ஞானம், கணக்கற்ற ஏனைய பொருள்கள், எட்டு குணங்கள் ஆகிய இவைகளெல்லாம் உன் சொற்படி தொழில் செய்யக் கடவன. நீ என்னைப் போலவே சிறப்புற்று வாழ்வாயாக’, என்று வரம் கொடுத்து, எல்லா உலகத்தவர்களும் கைகூப்பித் தொழ, முரச வாத்தியங்கள் முழங்க, “இவனுக்கு இராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்வதற்காக, இங்கு நிற்கும் தேவர்களனைவரும் மனம் இணங்கி உரிய செயல்களைச் செய்வீராக” என்று கட்டளையிட்டார்.

பிரகலாதன் மூவுலக அரசாட்சியை வகித்தல்

25. தேம னுரிமை புரியத் திசைமுகத்தோன்
ஓம மியற்ற வுடையோன் முடிசூட்டக்
கோமன் னவனாகி மூவுலகுங் கைக்கொண்டான்
நாம மறையோதா தோதி நனியுயர்ந்தோன்.
(யு.க.—இ.வ.ப.—175)

அப் பெருமான் கட்டளைப்படியே தேவர்களும், அவர்கள் அரசனுன இந்திரனும் உரிய குற்றேவல்களைச் செய்யவும், பிரமன் ஓமம் வளர்த்து வைதீகச் சடங்கு செய்யவும், உடையவனுன நரசிங்கப்பெருமான் பட்டாபிஷேகம் செய்ய, பிரசித்தி பெற்ற வேதங்களை எந்தக் குருவிடத்தும் ஓதாமல் உணர்ந்து மிகச் சிறப்புற்றவரான பிரகலாதாழ்வார் மூன்று உலகங்களையும் வசப் படுத்திக் கொண்டார்.

26. ஈதாகு முன்னிகழ்ந்த தெம்பெருமா னென்மாற்றம்
யாதானு மாக நினையா திகழ்தியேல்
தீதாய் விளைதல்நனி திண்ணமெனச் செப்பினுன்
மேதாவி கட்கெல்லாம் மேலான மேன்மையான்.
(யு.கா.—இ.வ.ப.—176)

“எங்கள் தலைவனே, முன்பு நடந்த வரலாறு இது. என் வார்த்தையைச் சிறிதும் பொருள் செய்யாது இகழ்வாயானுல் தீமையுண்டாகி அது வளர்தல் மிக நிச்சயம்” என்று, அறிவுடையார் யாவரினும் மேம்பட்ட மேன்மையுடையவனுன விபீடணன் இராவணனுக்குச் சொல்லிமுடித்தான்.

இராவணன்

விபீடணன், அசுவத்தாமன், மகாபலி சக்கரவர்த்தி, வியாசர், அனுமன், கிருபன், பரசுராமன் என்னும் சிரஞ்சீவியரோடு ஒரு சிரஞ்சீவி. ஆதலால், கோபமிக்க இராவணன் விபீடணனைப் பார்த்துப்பரிகாசமாக “ஏ சிரஞ்சீவி, இரணியன் என்னைப்போன்றவரினும் மகா பலசாலி, அல்லவா? அந்த இரணியனைக் கொன்றவனிடம் அன்பு பூண்டாய். பெற்றதந்தையின் மார்பைப் பிளந்தது கண்டு மகிழ்ச்சியடைந்த புத்திரனுன பிரகலாதனும் நம் பகைவுர்பால் அன்பு செய்யும் நீயுமே ஒருவருக்கொருவர் நேர். வேறு யார் நிகராவார். அப் பராக்கிரமசாலியாம் இரணியனின் மகன் பிரகலாதன் தன் தந்தையின் உயிருக்கு உலைவைத்து முடி சூட்டிக் கொண்டான். அதுபோல, ஏ ஏழைமதியனே, இராமனிடம் நான் தோல்வியுற்ருல் அவன் தயவினுல் என்னுடைய இராஜ்ஜியத்தை நீ ஆளலாம் என்று எண்ணுகிருய்போலும். இதற்காக முன்கூட்டியே நீ அம் மானிடர்பால் அன்பு செய்து என்பு உருகுகிருய், கண்ணீர் வடிக்கின்ருய், துதி பாடுகின்ருய். உனக்கு அவர்கள்தான் சரண். இதற்குமேல் என்ன வேண்டும்? அவர்களை நேசிக்கின்ருய். என்னை வெல்ல சூழ்ச்சி செய்கின்ருய். அரசின்மேல் ஆசை வைத்துவிட்டாய். உன் செயல் வெகு அழகாயிருக்கிறது. எனக்கு இன்னும் பகை வேரு வேண்டும்”.

27. அன்று வானரம் வந்துநஞ் சோலையை யழிக்கக்
கொன்று தின்றிடு மின்னெனத் தூதரைக் கோறல்
வென்றி யன்றென விலக்கினை மேல்வினை யெண்ணித்
துன்று தாரவன் றுணையெனக் கோடலே துணிந்தாய்.
(யு.கா.—வி.அ.ப.—7)

"அன்றைக்கு ஒரு குரங்கு வந்து சோலையை அழித்தபோது அதனைக் கொன்று தின்னுங்கள் என்று நான் சொல்ல, நீ இடை மறித்து, தூதரைக் கொல்லக் கூடாது என்று நீதி கூறித் தடுத்து, மேல் வினைவுகளை எண்ணி, இப்போது அவனைச் சரண்புகுவதே மேல் என்று துணிந்துவிட்டாய்."

28. அஞ்சினை யாதலி னமர்க்கு மாளலை
தஞ்சென மனிதர்பால் வைத்த சார்பினை
வஞ்சனை மனத்தினை பிறப்பு மாறினை
நஞ்சினை யுடன்கொடு வாழ்த னன்றரோ.
(யு.கா.—வி.அ.ப.—8)

"நீ பயப்படுவதனால் யுத்தத்திற்குத் தகுதி யற்றவன். மனிதரைச் சரணெனக் கொண்டுவிட்டாய். வஞ்சக மனத்தன். உடன்பிறப்பை நீ எண்ணிப் பார்க்கவில்லை. நஞ்சுடன் வாழ முடியுமா? அது நன்மைதான் பயக்குமா?"

29. பழியினை யுணர்ந்துயான் படுக்கி லேனுனை
ஒழிகிலை புகலுத லொல்லை நீங்குதி
விழியெதிர் நிற்றியேல் விளிதி யென்றனன்
அழிவினை யெய்துவான் அறிவு நீங்கினான்.
(யு.கா.—வி.அ.ப.—9)

தனக்கு வரப்போகும் அழிவை உணராத இராவணன். "பழிக்கு அஞ்சி உன்னைக் கொல்லாது விடுகின்றேன். வாய்க்கு வந்ததை யெல்லாம் சொன்னாய். விரைவில் என்னைவிட்டு ஓடிப் போய்விடு இனி என் கண் எதிரில் நீ நிற்பாயாகில் உன்னைக் கொன்று. விடுவேன்" என்று சொன்னான்.

இப்படிச் சொன்னானோ இல்லையோ, விபீடணன் மேலே வானிற் கிளம்பினான். அவனோடு அவன் மந்திரிகளான அனலன், அனிலன், அரன், சம்பாதி என்ற நால்வரும் உடன் கிளம்ப, அவர்களுடன் சிந்தித்து மேலும் சில உறுதிகளைச் சொல்வானாயினான்.

விபீடணன்

30. வாழியாய் கேட்டியால் வாழ்வு கைம்மிக
ஊழிகாண் குறுநின துயிரை யோர்கிலாய்
கீழ்மையோர் சொற்கொடு கெடுத னேர்தியோ
வாழ்மைதா னறம்பிழைத் தவர்க்கு மாகுமோ.

(யு.கா.—வி.அ.ப.—11)

"வாழ வேண்டுமென்ற விருப்பமுடைய அண்ணு, யான் சொல்வதைக் கேட்பீர்களாக. செல்வ வாழ்க்கை மேற்பட்டு நிற்க, பல்லாண்டு வாழ்வதற்குரிய தங்கள் உயிரையுங் கருதாது, கீழோர் சொற்கேட்டு, அழிதற்கு உடன்பட்டீர்களோ ? தருமம் தவறியவர்க்கும் நல்வாழ்வு கிட்டுதல் உண்டோ?"

31. புத்திரர் குருக்கள்நின் பொருவில் கேண்மையர்
மித்திர ரடைந்துளோர் மெலியர் வன்மையோர்
இத்தனை பேரையும் இராமன் வெஞ்சரஞ்
சித்திர வதைசெயக் கண்டு தீர்தியோ.

(யு.கா.—வி.அ.ப.—12)

"புத்திரர், குருமார், ஒப்பற்ற பந்துக்கள், நண்பர், சார்ந் துள்ளார் ஆகிய இத்தனை பேரையும் இராமபாணம் சித்திரவதை செய்வதைப் பார்த்துவிட்டுத்தான் சாகப்போகிறீர்களோ ?"

32. எத்துணை வகையினு முறுதி யெய்தின
ஒத்தன வுணர்த்தினே னுணர கிற்றிலை
அத்தவென் பிழைபொறுத் தருளு வாயெனு
உத்தம னந்நக ரொழியப் போயினுன்.

(யு.கா.—வி.அ.ப.—13)

"நான் எத்துணை உறுதிகளை எடுத்துக்கூறினுலும் தாங்கள் அவற்றை ஒரு சிறிதும் எண்ணிப் பார்க்கிறீர்களில்லை. தலைவரே, தாங்கள் என் குற்றத்தைப் பொறுத்தருள்வீர்களாக" என்று விபீடணன் கூறிவிட்டு இலங்கையை விட்டகன்றுமேலே ஆகா யத்திற் கிளம்பினுன்.

பிறகு அவரும், அவருடன் போந்த மந்திரிமார்கள் நால் வரும், இராமபிரான் கடற்கரையில் வந்து அமர்ந்துளார் என்பதை அறிந்து, அங்குச்சென்று, வானரசேனையை விளக்கொளி யில் நன்கு கண்டனர். சேனை மிகப்பெரியதே என்று தன் துணைவ

ரிடம் விபிடணன் கூறினான். "என் கொள்கையையும், அண்ணன் கொள்கையினையும் நன்கு உணர்ந்தீர். இனி யான் செய்ய வேண்டுவது யாது என நன்கு ஆய்ந்து கூறுங்கள்" என்றான்.

உடனே அந் நால்வரும் ஒருமித்து "இனித் தாமதம் செய்யாது தர்ம சொரூபியாகிய இராமனைச் சரண்புகுவதே தகும்" என, "இதுவே நல்லது, வேறு செய்தால் நாமும் அரக்கரேயாவோம்; இராமனடியைப் புல்லுதும், புல்லிப் பிறப்பறுப்போம்" என்று முடிவு செய்தனன் விபீடணன்.

"இதற்குமுன் நான் இராமனைப் பார்த்ததில்லை. அப்படியிருக்க அவர்பால் எனக்கு அன்பு பெருகுவது ஏன்? என் என்பும் குளிர்கிறது. நெஞ்சம் நெக்குருகுகிறது. ஆதலால் அவர் புன் பிறவியின் பகைஞன் என்பது புலனாகிறது. நான் பிரம்மாவைக் குறித்துக் கடுந்தவம் புரிந்து. பரம்பொருளிடம் பக்தி, தரும நடத்தை, நீதி தவறாமை, எல்லாப் பிராணிகளிடமும் நேயம், வேதியர் அருள் ஆகிய இவற்றையெல்லாம் விரும்பி வரமாகப் பெற்றிருக்கிறேன். அவ் வரங்கள் யாவும் வந்து பயனளிக்கும் காலம் இது. நீங்கள் சொல்லியதும் சரியே. இனித் தாமதியாது எண்ணியதை நிறைவேற்றுவோம்" என்றான்.

அப்போது இரவு நேரம். ஆதலால் இராமபிரானிடம் போதற்குத் தக்க சமயம் அன்று என்று ஆங்கு ஒரு சோலையின் ஒரு பால் தங்கியிருந்தனர். இரவு கழிந்து பொழுது விடிந்தது. அச் சமயம் இராமபிரான் கடலைக் கடப்பது கருதிக் கடற்கரைக்கு வந்தார். அங்கே தாழை, கருங்குவளை, கருநெய்தல், புன்னை, அன்னப்புட்கள், மலர்ச்சோலை முதலிய எல்லாவற்றையுங் கண்டார். பொன்னிறக் கடற்கரை, மணல்மேடு, முத்துக்குவியல், பவளம், இரத்தினம் இவைகளையும் பார்த்தார். அலைகள் அழகாக எழுந்து விழுந்து பரந்து வந்தன.

அம் மணற்பாங்கர் நுளைச்சியர் ஆங்காங்கு கூடற்சுழித்தலையும் பார்த்தார். கூடற்சுழித்தல் என்றால் என்ன தெரியுமோ? கடல் தெய்வத்தை வணங்கி வாழ்த்தி, 'என் கணவன் இப்போது கூடுவாராயின் நீ கூடு' என்று மணலிற் சுழித் திழைத்தல். கடலிற் சென்ற கணவன்மார்களைப் பிரிந்த மகளிர் கண்களை மூடிக் கொண்டு சுழிக்கிற அச் சுழி பிளவுபடாமல் இரு நுனியும் சேர்ந்திடுமாயின் கணவர் கூடுவர் என்றும், சேராவிடின் கூடாரென்றும், இங்ஙனம் நிமித்தம் உணரப்படும் என்பர்,

ஆண் அன்னம் தன் பேடையைப் பாதிச் சிறகாலணேத்துத் துயில் கொள்வதைக் கண்டு பெருமூச்சு விடுவார். உணவு தேடிக் கொண்டு வெளிச்சென்ற ஆண் நாரை இன்னும் வரவில்லேயே யென்று எதிர் நோக்கிக் கவலே கொண்டிருக்கும் பெண் நாரையைக் கண்டு இரக்கங் கொள்வார். ஒரு பேடையை இரண்டு பெரிய ஆன்ன குருகுகள் உற்று நோக்கி, அதற்காகப் போர் புரிவதைக் கண்டு உள்ளம் கருகுவார். ஆண் பெண் அன்னங்களின் ஊடலின் வெற்றி தோல்விகளேக் கண்டு பொருமுவார். இவருடைய நிலே மையை உற்றுணர்ந்த சுக்கிரீவன், அங்கதன், ஜாம்பவான், அனுமன் முதலிய அனேவரும் வந்து, இராமபிரானேத் தேற்ற, அவர் ஒருவாறு தேறி, அவர்களுடன் சென்று எல்லோரும் ஒருங்கிருந்தார்கள். அப்போது,

33. மற்றெருரு பொருளுள தென்னின் மாறிலாக்
கொற்றவ சரணெனக் கூய தோருரை
உற்றது செவித்தலத் தைய னெல்லேயின்
நற்றுணே வரைமுகம் நயந்து நோக்குரு.

(யு.கா.—வி.அ.ப.—35)

'கொற்றவா, சரண்' என்ற ஒரு சொல்லேச்சொல்லிக்கொண்டு, விபீடணன் வானர சேனேயின் பக்கல் போய்ச் சேர்ந்தான். அதனேச் செவிமடுத்த இராமபிரான், துணேவரை நோக்கி,

34. எந்தையே யிராகவ சரண மென்றசொல்
தந்தவ ரெனேவரோ சாற்று மின்னென
மந்தண முற்றுழீஇ வயவெஞ் சேனேயின்
மூந்தினர்க் குற்றதை மொழிகு வாமரோ.

(யு.கா.—வி.அ.ப.—36)

"எந்தையே, இராகவ சரணம் என்றது யார் சொல்லுங்கள்" என்று வினுவினுர். விபீடணனும் அவனது மந்திரிகள் நால்வரும் கடற்கரையில் வந்திருப்பதை வானர சேனேயிலிருந் தவர் பார்த்துவிட்டார்கள். உடனே வானரர் விபீடணரைச் சூழ்ந்துகொண்டு 'அரக்கர் வந்தனர். இவரைப் பிடியுங்கள், அடியுங்கள்' என்று ஒரே கூச்சலிட்டனர் ஒரு சிலர். "நம் தருமதேவதை இராவணனேக் கொண்டுவந்து நம் முன் சேர்த்துவிட்டது. இப்போது நம் காரியம் கைகூடிற்று" என்று எண்ணுவாராயினர். 'இராவணனுக்குப் பத்துத்தலே, இருபது கைகள் என்பரே, அவை ஒழிந்தனவோ?' என்பர் சிலர். 'அடே,

எங்களோடு போர் புரிவாய்' என்று ஒருவரை ஒருவர் முந்துவர் சிலர். 'இவனைப் பிடித்துச் சிறையிலடைத்து நம் தலைவற்குத் தெரிவிப்போம். இவனைப் பிடித்துப் போதுவோம். ஏன் சும்மா நிற்பது ? இவர்கள் இராக்கதர்கள். கண் மூடிக் கண்திறப் பதற்குள் மாயமாய் மறைந்து விடுவார்கள். உடனே பிடித்துக் கொல்வதைத் தவிர வேறு யோசனை என்ன ?' என்று கூச்சலிட, இதனை அறிந்த அனுமன், அசுவினி தேவர்கள் என்னும் இரட்டையரின் மைந்தர்களான மயிந்தன், துமிந்தன் என்னும் இருவரை நோக்கி, 'நீங்கள் போய் அக் கூச்சல் என்ன வென்று பார்த்துவாருங்கள்' என்ன, அவர்கள் போய் விபீடணனை நண்ணினர். பார்த்தமாத்திரத்தில். அவ்வரக்கர் நல்லவர் என் றறிந்து அருகில் சென்று அவர்களுள் மயிந்தன் என்பவன் 'நீங்கள் யார் ? நுங்கள் கருத்து யாது?' என்றுவினவ, அவர்களுள் அனலன் என்பான் சொன்னான் விபீடணனைச் சுட்டிக் காட்டி, 'இவர் நற் குணம், நல்லொழுக்கம், வாய்மை யாவும் நிறைந்தவர். பிரம்ம தேவனுக்குப் பேரனுடைய புதல்வர். விபீடணன் என்னும் பெயரர். சூரிய வம்சத்தில் முதன்மை பெற்றவனும், பூமிக்குத் தலைவனுமான ஸ்ரீ ராமபிரானின் திருவடிகளைச் சரணமாக அடைந்து ஈடேறும்பொருட்டு வந்துள்ளார். பிரம்மாவுக்குப் பேரன் எப்படியென்றால், பிரம்மாவின் புத்திரர் புலஸ்திய முனி, அவர் மகன் விசிரவசு, அவர் மகன் விபீடணன். தர்மநெறி தவறாமை, மால்பக்தி, வாய்மை, பிராமண விசுவாசம் ஆகிய வற்றைத் தன் தவத்தின் பயனாகப் பிரம்மாவிடம் வரமாகப் பெற்றவர்'.

35. சுடுதியைத் துகிலிடைப் பொதிந்து துன்மதி
இடுதியே சிறையிடை யிறைவன் தேவியை
விடுதியே லுய்குதி விடாது வேட்டியேல்
படுதியென் றுறுதிகள் பலவும் பன்னினான்.

(யு.கா.—வி.அ.ப.—47)

'இவர் தன் தமையன் இராவணனைப் பார்த்து, நெருப்பை மடியில் வைத்துக் கட்டிக்கொண்டிருப்பதுபோல இராமபிரான் மனைவியாகிய சீதாபிராட்டியைச் சிறையில் வைத்திருக்கிறாயே! உடனே இராமபிரானிடம் கொண்டுபோய் விட்டுவிடு. இன்றேல் குலத்தோடு நாசமாவாய் என்று பலவாறு சொன்னார்.'

'இராவணன், பொல்லாத மூடன், இதனைக் கேட்டதும் கடுங் கோபங்கொண்டு, தம்பி என்று உன்னைக் கொல்லாமல் விடுகின் றேன். என் முன் நீ இனி ஒரு கணமும் நில்லாதே, ஓடிப்

பிழைத்துப்போ என்ருன். ஆதலால் இவர் அவனைவிட்டு நீங்கி ஈண்டு வந்துள்ளார்' என்ன, அது கேட்ட மயிந்தன், தன் தம்பி யையும் சேனையையும் நோக்கி, 'இவர்களை நம்மவர் ஒன்றும் செய் யாமல் பார்த்துக் கொள்ளுங்கள். நான் இராமபிரானிடம் போய்ச்சொல்லி வருகிறேன்' என்று இராமபிரானிடம் சென்ருன்.

சென்று, இராமபிரான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினுன். 'ஒன்று சொல்ல வேண்டும்' என, 'சொல்' என்னச் சொல்வானு யினுன். "பின் விளைவு எனக்குத் தெரியாது. வஞ்சகத் துரோகி இராவணனின் தம்பியாம். பெயர் விபீடணனும். நால்வரோடு வந்திருக்கிருன். நம் வானரர் அவனைச் சாடினர். நான் அவர் களைச் சமாதானப்படுத்தி விசாரித்தேன். இராவணன் செயல் பிடிக்காமல் தங்கள் பாதங்களே துணை செய்யும் எனச் சரண்புக வந்துள்ளாராம். அவர் எல்லாவகையிலும் நல்லவராம். வேண தவம் செய்து பிரம்மாவிடம் வரம் பெற்றவராம். சீதையைக் கொண்டு போய் விட்டுவிடு, இன்றேல் உங்கள் தலை நிலத்தில் நிச்சயமாய்ப் புரளும் என்று தமையன் இராவணனுக்குப் புத்தி சொன்னுராம். அதற்காக இராவணன் மிகவும் சீறி, என் முன் நில்லாதே, ஓடிப்போய் விடு, இன்றேல் கொன்று விடுவேன் என்று ணும். அவ்வாறு சொல்லவே, இவண் சரண்புக வந்துள்ளாராம். இது அவர் மந்திரி அனலன் சொல்லத் தெரிந்தது, இதுதான் விஷ யம்" என்று சொல்லி முடித்தான்.

இவற்றையெல்லாம் கேட்ட ஸ்ரீ இராமபிரான், ஆண்டிருந்த முக்கியஸ்தர்களை நோக்கி "நண்பர்களே, எல்லாவற்றையுங் கேட்டீர்கள். இவ் விபீடணனைச் சேர்ப்பதா, துறப்பதா, சொல் லுங்கள்" என்ருர்.

சுக்கிரீவன்

"எல்லாம் உணர்ந்த தங்களுக்குத்தெரியாததும் ஒன்றுளதோ? எங்களைக் கேட்பது எதற்காக? ஆயினும் கேட்டதனுற் சொல் கிறேன். இவனுக்கும் இவன் தமையனுக்கும் யாதொரு சண்டை சச்சரவுகள் இல்லை. அரக்கரில் யார் நல்லவன்".

36\. தகையுறு தம்முனைத் தாயைத் தந்தையை
மிகையுறு குரவரை யுலகின் வேந்தனைப்
பகையுற வருதலும் துறந்த பண்பிது
நகையுற லன்றியே நயக்கற் பாலதோ.

(யு.கா.—வி.அ.ப.—63)

"தந்தை, தாய், தமையன், குரவர், அரசன் இவர்களைப் போர் வந்த காலத்தில் விட்டு ஓடிவருவது முறையன்று. அல்லது அஞ்சி வந்து அடைக்கலம் புகுந்தானென்ருலும் இது உண்மையாகுமா? அண்ணன் செய்வது தருமமன்று என்று உணர்ந்தால் அவனை விட்டகன்று, எங்கேனும் ஓடிப்போய்ச் சாதல் நன்றேயன்றி, பகைவரிடம் போய்ச் சரண்புகலாமா ? இது பழியன்ரே ? வாழ்வில் கூட இருந்து வாழ்ந்து, போர் வந்த காலத்தில் பிரிந்து வந்தானென்ருல் அவன் யார்க்குத்தான் உறவாகுவான். மாரீசன் எவ்வளவோ தானம், தவம் உடையவன். அப்படியிருந்தும் இராவணன் வார்த்தைக்கு உட்பட்டுத் தவத்தையுங் கைவிட்டான். அப்படியிருக்க இவனே ஆபத்துச் சமயத்தில் தமையனை விட்டுப் பிரிந்து வந்துவிட்டானென்ருல், இனி என்ன செய்யமாட்டான்? யமனேடு கூடி எல்லா உலகங்களும் சேர்ந்து வந்தாலும் எதிர்க்கும் சக்தியையுடைய நயக்கு இவன் சேர்க்கையால் என்ன நன்மை? அரக்கரைப் பூண்டறுத்து ஒழிக்க வந்த நாம், அவ்வரக்கருள் ஒருவனைத் துணையாகக் கொள்வோமாளுல் அது நம் பலவீனத்தைத்தான் காட்டும்"

37. விண்டுழி யொருநிலை நிற்பர் மெய்ம்முகங்
கண்டுழி யொருநிலை நிற்பர் கைப்பொருள்
கொண்டுழி யொருநிலை நிற்பர் கூழுடன்
உண்டுழி யொருநிலை நிற்பர் உற்றவர்.

(யு.கா.—வி.அ.ப.—70)

" உறவினனென்ருல் உடனிருந்தாலென்ன ? தூரத்திலிருந்தாலென்ன? செல்வம் உற்ருலென்ன? செல்வம் அற்ருலென்ன ? உண்ணும்போதும் மற்றும் எக்காலத்திலும் ஒரே நிலையில் நிற்பர். ஆகையால், இவன் கபடச் செய்கையுடையவன். இவனை ஏற்பது தகாது" என்ருன்.

ஜாம்பவான்

" பிரபுவே, எப்படியிருந்தாலும் பகைவன் பகைவனே. நம்பலாகாது. கடைசியில் மாறிவிடுவார்கள். மேலும் சிற்றினத்தைச் சேரக் கூடாது. ஒருமுறை சரணென ஏற்றுக்கொண்ட பிறகு அவர் செய்கை தெரிந்து கைவிடுவோமாளுல் உலகம் நம்மைப் பழிக்கும். நமக்கு அனுபவம் வேறு இருக்கின்றது. இனி விளையப்போவது என்னவோ. முன்னம் பிராட்டியோடு காட்டில் இருந்தபோது மாரீசன் மாய மானுக வந்து என்ன செய்தானே அதே மாதிரிதானிருக்கும் இவன் வரவும் " என்ருன்.

நீலன்

பிறகு நீலனைக் கேட்டார். அவன் சொன்னன், "என் சுற்றத்தாரைப் போரில் கொன்றுவிட்டார்கள், என் மனைவியை மானபங்கப்படுத்தினர், பெரும் பொருளை இழக்கும்படி செய்தனர் என்று தஞ்சம் அடைந்தவர்கள், அவமானமடைந்தவர்கள், போரிலே புறங்கொடுத்துப்போந்தவர், தாயாதிகளால் வறுமையுற்றவர், பிறர் கிளைஞரை மடியுமாறு அழித்தவர், வேற்றரசரால் கேடடைந்தவர், மாற்ருன் மக்களாயினும் சரி, நம்மிடம் புகல் என வந்தால் ஏற்றுக்கொள்ளலாம். இப்படிக்கெல்லாம் எளிமைப்படாதவர், அஞ்சத்தக்க வலிமை பொருந்தியவர் ஆகிய இவர்கள் சமயத்தில் நம்மை விலகி ஆபத்திழைப்பார்கள். இங்கு வந்திருக்கும் விபீடணன் முன் சொல்லிய எவரிற் சேர்ந்தவன் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். காலம், நூற்பொருள் இவைகளை எண்ணிப் பார்க்குமிடத்து நல்லொழுக்கம் ஒன்றை மாத்திரம் எண்ணி ஏற்றல் சரியன்று" என்ருன்.

மற்றுள்ளோர்

38. மற்றுள மந்திரக் கிழவர் வாய்மையால்
குற்றமில் கேள்வியர் அன்பு கூர்ந்தவர்
பற்றுதல் பழுதெனப் பழுது ருவொரு
பெற்றியி னுணர்வினர் முடியப் பேசினர்.

(யு.கா.—வி.அ.ப.—85)

மற்றுள்ள மந்திரிகள், சத்திய சீலர், நல்ல கேள்வி ஞானமுடையவர், அன்பர் எல்லாருமே இவனை ஏற்றல் பழுதென ஒரே முடிவு கட்டினர்.

அனுமன்

பின்னர் இராமபிரான் அனுமனைப் பார்த்து, "உன் கருத்து யாது?" என்ருர். மிக்க கல்வி கேள்விகளில் தேர்ந்த அனுமன் வாய் பொத்தி, தலைவணங்கி நின்று சொல்லுவாராயினர் "பேரறிவாள, ஒன்றுந் தெரியாதவராயினும் பக்கத்திலிருப்பவர்களையும் கேட்க வேண்டும் என்ற தங்கள் கொள்கையை அறிந்தேன். இங்குள்ள உத்தமர் அனைவரும் நன்கு ஆராய்ந்து சொல்லினர். நானுமா சொல்ல வேண்டும் ? மந்திரிகளெல்லாம் சொன்னது உண்மையே. ஆயினும், சக்ரதாரியே, நான் அப்படிச் சந்தேகிக்கவில்லை. அதற்குக் காரணங்கள் உண்டு. அகத்தழகு முகத்தில்

தெரியும். அதை மறைக்க முடியாது. பகைவர் வந்து நம்மைச் சரணடைய மாட்டார். வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு அரசு தந்தீர்கள். தங்கள் பராக்கிரமத்தை நன்குணர்ந்தே, தானும் அரசு (மோக்ஷம்) பெறலாம் என்றே வந்துள்ளார். கொடிய அரக்கர் அரசு நிலைக்காது. பெரிய சாம்ராஜ்யத்தைத் தம்பிக்கு மனமுவந்து ஈந்தீர்களென்பதைத் தெரிந்தே வந்திருக்கிறுர். காலமல்ல என்றும் சொன்னுர்கள். வாலி தொலைந்தான். இனி இராவணனும் போய்விடுவான். மேலும், தாங்கள் முழு முதற்கடவுள் என்பதையும் கண்டு தெரிந்தே இராவணனைப் பிரிந்து வந்துள்ளார். மாயமெல்லாம் தெரிந்த அரக்கர்களில் தேர்ந்த ஒருவன் இச்சமயம் நம்மை வந்து அடைந்தால், அதைப் பயன்படுத்திக்கொண்டால் காரியசித்தி மிக எளிதாகும். பகைவர் உள்ளத்தில் உள்ளதைத் தெளிதல் எளிதன்று என்று வலிய பகைவரிடத்து எண்ணுதல் சரி. ஆனுல், இவ் எளியவரிடம் ஏன் அச் சந்தேகம். நான் இலங்கைக்குத் தூது சென்றிருந்த காலத்தில்,''

39. கொல்லுமின் இவனையென் றரக்கன் கூறிய
எல்லையிற் றூதரை யெறித லென்பது
புல்லிது பழியொடும் புணரும் போர்த்தொழில்
வெல்லலம் பின்னையென் றிடைவி லக்கினுன்.

(யு.கா.—வி.அ.ப.—97)

“இராவணன் ‘இவனைக் கொல்’ என்றபோது, ‘நில்’ என்று சொல்லி, ‘தூதரைக் கொல்லுதல் பழி, போரில் நமக்கு வெற்றி கிட்டாது’ என்று சொல்லி விலக்கினுர்.”

40. மாதரைக் கோறலு மறத்து நீங்கிய
ஆதரைக் கோறலு மழிவு செய்யினுந்
தூதரைக் கோறலுந் தூய்தன் றுமெனு
ஏதுவிற் சிறந்தன வெடுத்துக் காட்டினுன்.

(யு.கா.—வி.அ.ப.—98)

“பெண்களையும் கோழைகளையும் கொன்ருலும், தூதரைக் கொல்லுதல் தகாது என்று காரணங் காட்டினுன். நிற்க,”

“நான் இலங்கையில் இரவில் இவர் மாளிகையை நண்ணிய காலை நன்னிமித்தங்கள் தோன்றின. அதுமாத்திரமன்று. அங்கே ஒரு மதுவோ, மாமிசமோ எதுவும் காணப்படாததோடு ஒரு சீலம் பொருந்திய பிராமணன் வீடு போன்றிருந்தது. இவர் இருக்கட்டும். இவர் மகள் திரிசடை, இராவணன் பிற மாதரைத்

தீண்டினுல் தலை சிதறி மாய்வன் என்ற சாபம் உண்டென்பதைச் சொல்லிச் சீதைக்குத் தைரியமூட்டி வைத்திருந்தாள். ஆதலால்,''

41. பெற்றுடைய பெருவரமும் பிறந்துடைய வஞ்சனையும்
பிறவு முன்கை
விற்றுடையின் விடுகணையால் வெந்தொழியு மெனக்கருதி
விரைவின் வந்தான்
உற்றுடைய பெருவரமு முகந்துடைய தண்ணளியு
முணர்வு நோக்கின்
மற்றுடையர் தாமுளரோ வாளரக்க னன்றியே
தவத்தின் மிக்கார்.
(யு.கா.—வி.அ.ப.—102)

''அரக்கர் பெற்றிருக்கும் பெருவரங்களும் வஞ்சகமும் தங்கள் விற்கணையால் வெந்தொழியும் என்பதை நன்குணர்ந்து தங்களிடம் விரைந்து வந்துள்ள இவருடைய வரங்களும், கருணையும், தத்துவ ஞானமும் வேறு எவ்வரக்கர்களிடம் உண்டு''

42. தேவர்க்கும் தானவர்க்கும் திசைமுகனே முதலாய
தேவ தேவர்
மூவர்க்கும் முடிப்பரிய காரியத்தை முற்றுவிப்பான்
மூண்டு நின்ருய்
ஆவத்தின் வந்தபய மென்ருனை யயிர்த்தகல
விடுதி யாயின்
கூவத்தின் சிறுபுனலைக் கடலயிர்த்த தொவ்வாதோ
கொற்ற வேந்தே.
(யு.கா.—வி.அ.ப.—103)

''வெற்றி வேந்தே, தாங்களோ தேவராலும், அசுரராலும், மூவராலும் செய்ய முடியாத ஒரு பெரிய காரியத்தைச் செய்து முடிக்க வந்துள்ளீர்கள். இத்தகைய தாங்கள், ஆபத்தில் வந்து அபயமென்றவரைச் சந்தேகித்து அபயம் நல்காது விடுவீர்களாயின், ஒரு கிணற்று நீரைக் கண்டு ஒரு சமுத்திரம் தனக்கு அதனுல் என்ன ஆபத்து வந்துவிடுமோ என்று சந்தேகிப்பது போலாகும்.''

''பகைவரிடத்தைச் சேர்ந்தவரென்ற ஒரே காரணத்தைக் கொண்டு இவ்விபீடணனை ஏற்காது விட்டிடுவோமாகில் அரசியல் தத்துவம் அறிந்தோரால் பரிகசிக்கப்படுவோம். பங்காளிகளில் பங்கு பாகங்களின் காரணமாகப் பகை ஏற்படின் தந்தை, தாய், தமையன் என்ற எதையும் பாராமல் கொல்லுந்தன்மையில் நிற்பர்.''

43. ஆதலா லிவன்வரவு நல்வரவே யெனவுணர்ந்தே
னடியே னுன்றன்
வேதநூ லெனத்தகைய திருவுளத்தின் குறிப்பறியே
னென்று விட்டான்
காதனுன் முகனுலும் கணிப்பரிய கலேயனேத்தும்
கதிரோன் முன்சென்(று)
ஒதினு னேதநீர் கடந்துபகை கடிந்துலகை
யுய்யச் செய்தான்.

(யு.கா.—வி.அ.ப.—105)

"ஆதலால் இவர் வரவு நல்வரவு என்பதே எனது திட நம்பிக்கை. வேதநூல் எனும்படியான தங்கள் திருவுளத்தை யானு அறிய முடியும்" என்று பிரமனுலும் எண்ணுதற்கு முடியாத சகல சாஸ்திரங்களேயும் சூரியனுக்கு முன்னே நடந்து சென்ற வண்ணம் கற்ற கலேஞனும், வெள்ளங் கடந்து இலங்கையை வேக வைத்த வீரனுமாகிய அனுமன் சொல்லி முடித்தான்.

இராமபிரான்

அதுகேட்ட இராமபிரான் மிக மகிழ்ந்து, இது சரியான யோசனே என்று மற்ருேரை நோக்கிக் கூறுவார். "இவன் வந்திருக்கும் காலமும் நன்று. இவனுக்கு அரசின்மேல் விருப்பமும் உண்டு. அறிவும் உண்டு. தவமும் உடையான். யாதொரு தவறுமில்லாதவன்."

44. மற்றினி யுரைப்ப தென்னே
மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி யன்ன
தன்றெனிற் பிறிதொன் ருலும்
வெற்றியே பெறுக தோற்க
வீகவீ யாது வாழ்க
பற்றுத லன்றி யுண்டோ
வடைக்கலம் பகர்கின் ருனே.

(யு.கா.—வி.அ.ப.—108)

"வேறு இனிச் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது. மாருதி சொன்ன மாற்றம் நன்றே. வெற்றியே ஆகட்டும் அல்லது தோல்வியே ஆகட்டும். வாழ்வே ஆகட்டும் அல்லது சாவே ஆகட்டும். அடைக்கலம் என்று சொல்லி வந்து அண்டினவனே ஆதரிப்பதன்றி வேறு உயர்ந்த தருமம் ஏதேனுமுண்டோ?"

45. இன்றுவந் தானென் றுண்டோ
வெந்தையை யாயை முன்னைக்
கொன்றுவந் தானென் றுண்டோ
வடைக்கலங் கூறு கின்றான்
தொன்றுவந் தன்பு செய்யுந்
துணைவனு மவனே பின்னைப்
பொன்றுமென் றாலு நம்பாற்
புகழன்றிப் பிறிதுண் டாமோ.
(யு.கா.—வி.அ.ப.—109)

"சரணடைந்தவன் இன்றுதான் வந்தான், தந்தை தாயைக் கொன்று வந்தான் என்பதென்ன? அடைக்கலம் என்று வந்துவிட்டால், பாராட்டப்படும் நண்பனும் அவன்தான். வேறு விதமாக ஏதேனும் நிகழுமாயினும் பழி அவன்பால். புகழ் நம்பாலன்றோ?"

46. பிறந்தநாட் டொடங்கி யாரும்
துலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்தநா ளுண்டோ என்னைச்
சரணென வாழ்கின் றானைத்
துறந்தநாட் கின்று வந்து
துன்னினன் சூழ்ச்சி யாலே
இறந்தநா ளன்றோ வென்று
மிருந்தநா ளாவ தென்றான்.
(யு.கா.—வி.அ.ப.—110)

"எனது முன்னோரான தராசு தட்டில் ஏறிய சிபிச் சக்கரவர்த்தியின் வரலாற்றைத் தெரியாதவர் எவரேனும் இருப்பாரோ? என்னை அடைக்கலம் என்று வந்து வாழ்வுபெற இருக்கிற அவனைத் துறப்பதைக் காட்டிலும் அவன் சூழ்ச்சிகளினால் இறப்புண்டு போகும் நாளல்லவா என்றும் இருந்த நாள் ஆகும்."

47. இடைந்தவர்க் கபயம் யாமென்(று) இரந்தவர்க் கெறிநீர் வேலை
கடைந்தவர்க் காகி யால முண்டவற் கண்டி லீரோ
உடைந்தவர்க் குதவா னாயின் உள்ளதொன் றீயா னாயின்
அடைந்தவர்க் கருளா னாயின் அறமென்னும் ஆண்மை என்னும்.
(யு.கா.—வி.அ.ப.—111)

"பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய ஆலகால விஷத்தை யுண்டு தேவர்கட்கு அபயம் அளித்த சிவனது செயலை அறியீரோ? வலி ஒடுங்கி வந்து இரந்தவற்கு உதவாதவன், யாசகனுக்குத் தன்னாலியன்றதைச் செய்யாமல் மறைப்பவன், சரணென வந்து அண்டியவரை ஆதரியாதவன் ஆகிய இவர்களிடம் தர்மத்திற்குத்தான் என்ன வேலை? பராக்கிரமம்தான் என்னாகும்?"

48. பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்வான் விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித் தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை வேதத்தின் விழுமி தன்றோ.
(யு.கா.—வி.அ.ப.—*112*)

"தன் பேடையைப் பிடித்து, தன்னையும் பிடிக்க வந்த பேதை வேடனுக்கு உதவி நற்கதி அடைந்த புருவின் கதையைக் கேட்டதில்லையா? அது தீ மூட்டி அவன் குளிரைப் போக்கிப் பின்பு தானும் அந் நெருப்பில் வீழ்ந்து இறந்து அவன் பசியையும் போக்கி மோக்ஷமடைந்தது என்னும் வார்த்தை வேத வாக்கியத்திலும் சிறந்ததல்லவா?"

49. போதக மொன்று கன்றி யிடங்கர்மாப் பொருத போரின்
ஆதியம் பரமே யானுன் னபயமென் றழைத்த வந்நாள்
வேதமு முடிவு காணா மெய்ப்பொருள் வெளிவந் தெய்தி
மாதுயர் துடைத்த வார்த்தை மறப்பரோ மறப்பி லாதார்.
(யு.கா.—வி.அ.ப.—*113*)

"கஜேந்திரன் ஆதிமூலமேயென்று அலறிய காலத்தில் திருமால் வந்து உதவியதைக் கேட்டதில்லையா? திருமாலே எல்லாமா யிருப்பினும் தன்னைச் சரணமடைந்தவரைக் காப்பதுவே பிரதானமாகக் கொண்டிருக்கிறார். 'அஞ்சினன், அபயம்' என்ற மார்க்கண்டேயனுக்குத் தான் முன்பு கொடுத்த குறைந்த ஆயுளையும் மாற்றி நிறை ஆயுளாய் ஆக்கியதைவிட மேன்மையுண்டோ? 'சரண் எனக்கு யார்' என்று சானகி அலறிய காலத்தில் என் தந்தை ஜடாயு வந்து இராவணனுடன் போர் செய்து உயிரையே இழந்த தன்மை என்பால் இருக்க வேண்டாமா?"

50. உய்யநிற் கபய மென்றா னுயிரைத்தன் னுயிரி னோம்பாக்
கையறு மொருவன் செய்த வுதவியிற் கருத்தி லோனும்
மையறு நெறியி னோக்கி மாமறை நெறியி னின்ற
மெய்யினைப் பொய்யென் றானு மீள்கிலா நரகில் வீழ்வார்.
(யு.கா.—வி.அ.ப.—*117*)

"அபயமென்றவனைக் காக்காதவனும், உதவியை மறந்தவனும், கடவுள் இல்லை என்கிற நாஸ்திகனும் என்றும் மீளுதலில்லாத நரகத்தில் வீழ்வார்."

51. சிதையைக் குறித்த தேயோ தேவரைத் தீமை செய்த
பேதையைக் கொல்வே னென்று பேணிய விரதப் பெற்றி
வேதிய ரபய மென்ருர்க் கன்றுநான் விரித்துச் சொன்ன
காதையைக் குறித்து நின்ற வவ்வுரை கடக்க லாமோ.
(யு.கா.—வி.அ.ப.—118)

"தண்டகாரண்யத்து ரிஷிகள் சரணடைந்த காலத்தில் இராவணனைக் கொன்று உங்களைக் காப்பாற்றுவேன் என்று வாக்களித்தது, சீதையை இராவணன் தூக்கிச் செல்வான், அதனுல் அவனைக் கொல்வேன் என்று எண்ணிச் சொன்ன சொல்லோ."

52. காரிய மாக வன்றே யாகுக கருணை யோர்க்குச்
சீரிய தன்மை நோக்கி னிதனின்மேற் சிறந்த துண்டோ
பூரிய ரேயுந் தம்மைப் புகல்புகுந் தோர்க்குப் பொன்ரு
ஆருயிர் கொடுத்துக் காத்தா ரெண்ணிலா வரச ரம்மா.
(யு.கா.—வி.அ.ப.—119)

"காரியம் ஆகட்டும் அல்லது ஆகாமற் போகட்டும். சரணடைந்தார்களைக் காத்து இரட்சித்த அரசர்கட்குக் கணக்கில்லை."

53. ஆதலா னபய மென்ற பொழுதத்தே யபய தானம்
ஈதலே கடப்பா டென்ப தியம்பினி ரென்பால் வைத்த
காதலா லினிவே றெண்ணக் கடவதென் கதிரோன் மைந்த
கோதிலா தவனை நீயே யென்வயிற் கொணர்தி யென்ருன்.
(யு.கா.—வி.அ.ப.—120)

"ஆதலால் என்னிடம் உள்ள அபிமானத்தினுல் இவனை அங்கீகரிக்கக்கூடாது என்றீர். சுக்கிரீவா, நீயே சென்று குற்றமற்ற அவ் விபீடணனை அழைத்துவா" என்று போகவிடுத்தார்.

சுக்கிரீவன்

அதன்படி சுக்கிரீவன் உடனே விபீடணன்பாற் செல்ல, துவிதன் இதனை முன்னே சென்று விபீடணனுக்கு உணர்த்த, விபீடணன் சுக்கிரீவன்பாற் சென்ருன். இருவரும் நெருங்கி ஒருவரை ஒருவர் தழுவினர். "இராமபிரான் உன்பால்

அபயம் வழங்கினுர். இப்போதே அவரை வந்து தொழுவாய்" என்று சுக்கிரீவன் சொல்லக் கேட்ட விபீடணன், புளகாங்கிதனுகி உள்ளங் குளிர்ந்தான். "நஞ்சினும் கொடிய என்னையும், தன் தேவியைக் கவர்ந்த பாதகன் தம்பியுமாகியவனையும் வருக என்று அருள் செய்தாரோ. இவ்வளவு கருணை வாய்ந்த இராமபிரானை இராவணனும் அடைந்து நற்கதி பெறலாமே. அந்தோ! அரக்கரெல்லாம் இனி அழிவரே, சூரியனும் இனி இலங்கைமீது பயமின்றிச் செல்வான்" என்ருன்.

54. தீர்வரு மின்னல் தம்மைச் செய்யினுஞ் செய்ய சிந்தைப்
பேரரு ளாளர் தத்தஞ் செய்கையிற் பிழைப்ப துண்டோ
கார்வரை நிறுவித் தன்னைக் கனலெழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி யமர ருய்ய வமிழ்துபண் டளித்த தன்றே.

(யு.கா.—வி.அ.ப.—128)

"தீராத துன்பத்தைத் தருவாராயினும் பேரருளாளர் தங்கள் செம்மையினின்றும் தீர்வதுண்டோ? பெரிய மலையையிட்டுத் தன்னைக் கலக்கியபோதிலும் பாற்கடல் அமுதையல்லவோ அளித்தது."

"துறவிகளின் நண்பனுன இராமபிரான் என்னையும் ஆட்கொண்டான். இனி யான் நரகத்தினின்றும் கரை ஏறினேன், பிறவி ஒழிந்தேன்." என, "அபயம் என்று வந்தோரை நல்லது, கெட்டது ஆயாது காப்பதையே கடனுகக் கொண்ட இராமபிரான் நின்னைக் காணும் விருப்பமுளர். தாமதியாமல் புறப்படுவாய்" என்ருன் சுக்கிரீவன். அவ்வளவுதான். கருமலையும் பொன்மலையும் சேர்ந்து வந்ததுபோல் விபீடணனும் சுக்கிரீவனும் சேர்ந்து இராமபிரானிடம் போந்தனர். விபீடணன் இராமபிரானை இலக்ஷ்மணன் பக்கத்தில் இருக்க, வானரசேனையின் மத்தியில் கண்டான்.

55. வீரனை நோக்கி யங்க மென்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர்
வாரநெஞ் சுருகிச் செங்கண் அஞ்சன மலையன் ருகில்
கார்முகில் கமலம் பூத்த தன்றிவன் கண்ணன் கொல்லாம்
ஆரருள் சுரக்கு நீதி யறநிறங் கரிதோ வென்ருன்.

(யு.கா.—வி.அ.ப.—137)

கண்டமாத்திரத்தில் உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிய, கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருக, மனமுருகி, "இம் மூர்த்தி செங்கண் படைத்ததோடு, அஞ்சன மலையோ, செந்தாமரை மலரப் பெற்ற காளமேகமோ; இம் மூர்த்தி சாக்ஷாத் தரும சுவரூபமேயாகிய மகாவிஷ்ணுவாகவே இருக்கவேண்டும். கருணை மழை பொழிகின்ற, அந்தத் தருமமூர்த்திக்கு நிறம் கருமை போலும்."

56. மின்மினி யொளியின் மாயும் பிறவியை வேரின் வாங்கச்
செம்மணி மகுட நீக்கித் திருவடி புனைந்த செல்வன்
தன்முனுர் கமலத் தண்ணல் தாதையார் சரணந் தாழ
என்முனுர் எனக்குச் செய்த வுதவியென் றேம்ப லுற்றுன்.
(யு.கா.—வி.அ.ப.—*138*)

“மின்மினிப் பூச்சியின் ஒளிபோலத் தோன்றி உடனே மறையுந் தன்மையுள்ள தனது ஜன்மத்தை அடியோடு ஒழிக்கும்படி செந்நிறமுள்ள இரத்தினமயமான ராஜகிரீடம் தனக்குத் தாய் மூலமாகக் கிடைத்திருக்கவும் அதனை வேண்டாமென்று ஒழித்துவிட்டு இராமபிரானது திருவடி நிலைகளைத் தனது முடிக்குக் கிரீடமாகத் தரித்த பாக்கியவானை பரதாழ்வானது தமையனும், தாமரை மலரில் வாழ்கின்ற பிரமதேவனது தந்தையுமாகிய இராமபிரானது திருவடிகளில் நான் வந்து வணங்கும்படி என் தமையனை இராவணன் எனக்குச் செய்த உதவிதான் என்னே!” என்று விபீடணன் வியந்து சொல்லிக் களிப்புக்கொண்டான்.

“பெருந்தவம் செய்தோர்க்கும் ஒழித்தற்கரிய பிறவி நோயைப் பார்வைமாத்திரத்திற்றுனே போக்கவல்ல மருந்தாகிய இராமபிரான் தானே தன் கூரிய பாணங்களால் மடித்துப் பிறவியை ஒழிக்கும்படியாயினமைக்கு இவ்வரக்கர்கள் என்ன புண்ணியம் புரிந்தனரோ? என்று வியந்தான். கைகளைத் தலைமேற் சுமந்து இராமபிரானது இணையடிகளில் சாஷ்டாங்கமாக வந்து வீழ்ந்தான். இராமபிரான் அவரை அனுக்கிரகித்ததற்கு அறிகுறியாக ‘எழுந்து இருப்பாயாக’ என்று கைசாடை காட்டினுர். ஈரேழு பதினுன்கு உலகமும் என் பெயரும் உள்ளவரையில் நீ சுகமாக வாழ்வதற்கு இலங்கைச் செல்வத்தை உனக்கு இன்று அளித்தேன்” என்றுர்.

அங்கிருந்த எல்லாரும் அச் செல்வத்தைத் தாம் தாம் அடைந்ததாக மகிழ்வெய்தி ஆரவாரம் செய்தனர். சராசரங்களெல்லாம் மகிழ்வெய்தின. உய்ந்தேன் என்று மகிழ்ந்து நின்ற விபீடணனைப் பார்த்ததும், இராமபிரான், இலக்குமணனை நோக்கி, ‘துஞ்சலில் நயனத்தைய, சூட்டுதி மகுடம்’ என்றுர்.

“ஐயனே, வஞ்சனை அரக்கனும் இராவணனுடன் பிறந்த தோஷம் தீர, தேவரீர் பாதுகைகளை அடியேன் சிரசிற் சூட்டுதல் வேண்டும்; அலங்காரமாக” என்றுன் விபீடணன்.

இராமபிரான்

57. குகனெடு மைவ ரானே முன்புபின் குன்று சூழ்வான்
மகனெடு மறுவ ரானே மெம்முறை யன்பின் வந்த
அகனமர் காத லேய நின்னெடு மெழுவ ரானேம்
புகலருங் கானந் தந்து புதல்வராற் பொலிந்தான் உந்தை.
(யு.கா.—வி.அ.ப.—*146*)

விபீடணன் தன்மையைப் பார்த்து, இராமபிரான் சொன்னர், "சக்கரவர்த்திக்கு நாங்கள் நால்வரே புத்திரராகப் பிறந்தோம். நாட்டைத் துறந்து காட்டுக்கு வந்ததும், குகன் சகோதரனைப் போல் அன்பு பாராட்ட ஐவரானேம். பிறகு மலையில் சுக்கிரீவன் அவ்வண்ணமே அன்பு பாராட்ட அவனுடன் அறுவர் ஆனேம். இப்போது இக் கடற்கரையிலே தம்பிக்குச் சூட்டிய மௌலியை எனக்குச் சூட்டுக என்பதனல் நீயும் ஒரு தம்பியாக விரும்புகிருய் போலும். ஆதலால் உன்னையும் சேர்த்து எழுவர் ஆனேம். என்னைக் கானகத்திற்கு அனுப்பியதால், உன் தந்தை பல புத்திரர்களைப் பெற்றுராயினர்" என்று கூறினர்.

விபீடணன்

விபீடணன், 'நாயினேனையும் உன்னுடன் உதித்தவர்களோடு ஒருவனுய்ச் சொன்னீர். அடிமையிற் சிறந்தேன்' என்று கூறிப் பாதுகைகளைத் தானே எடுத்துத் தன் சிரசிற் சூட்டிக்கொண்டான்.

சந்தோஷ ஆரவாரம்

அப்படித் திருவடியைச் சூடி கரியமலைபோல் நின்றவிபீடணனை இராம லக்ஷ்மணர்கள் கண்டு உவகை கூர்ந்தனர். எல்லாரும் இன்புற்றனர். தேவர்கள் வாழ்த்திப் பூமழை பொழிந்தனர். மண்ணும் விண்ணும் ஆர்ப்பரித்தன.

பிரமாவும் தருமதேவதையும்

தன் கொள்பேரனுன இராவணனுற் பழிப்பெய்திய தன் மரபு விபீடணனுல் சிறப்புற்றதென்று பிரமன் துயரொழிந்தானுக, தரும தேவதையும் இராவணனது கொடுமை ஒழிந்ததே என்று சந்தோஷமடைந்து ஆவலங் கொட்டிற்று.

இராமபிரான்

இராமபிரான் இலக்குமணனை நோக்கி, "இதனைப் பலரும் அறியும்படி பாடிவீட்டைச் சுற்றி விபீடணனை வலங் கொள்க நீயும் சூரிய குமாரனும்" என்ன, அப்படியே பாதுகா முடியுடன் விபீடணனை வலஞ் செய்வித்தனர்.

பெரியோர்களின் கொண்டாட்டம்

58. இற்றைநா ளளவும் யாரு மிருடிக ளிமையோர் ஞானம்
முற்றினு ரன்பு பூண்டார் வேள்விகள் முடித்து நின்ருர்
மற்றுமா தவரு மெல்லாம் வாளெயிற் றிலங்கை வேந்தன்
பெற்றதார் பெற்ரு ரென்று வியந்தனர் பெரியோ ரெல்லாம்.

(யு.கா.—வி.அ.ப.—154)

யாருக்கும் எட்டாத இந் நிலை விபீடணனுக்கு எட்டியது குறித்து இப் பேறு யார்க்கும் கிட்டுதற்கரிது என்று பெரியோர் எல்லாம் ஆனந்தப் பரவசமாயினர்.

இராமபிரான் விபீடணனுக்கு உறையுள் அளிப்பதும் சூரியன் அஸ்தமிப்பதும்

59. வந்தடி வணங்கிய நிருதர் மன்னவற்கு
அந்தமி லாததோர் உறையுள் அவ்வழித்
தந்தனன் விடுத்தபின் இரவி தன்கதிர்
சிந்தின வெய்யவென் றெண்ணித் தீர்ந்தனன்.

(யு.கா.—வி.அ.ப.—155)

இப்படி வலம் வந்த விபீடணனுக்கு ஒரு தனி உறையுளும் அமைத்துத் தர இராமபிரான் ஆக்ஞாபித்தார். அப்படியே விபீடணனும் பெற்ருன். சூரியனும் இவ் வைபவத்தைக் கண்டு, ஆறுதலடைந்து, இனியும் தன் உஷ்ண கிரணத்தால் யாரும் வெப்பம் அடையக் கூடாதென்று மேற்கடலில் மூழ்கினுன்.

சரணுகதப் பயன்

இப்படி இராமபிரானுல் ஏற்றுக்கொள்ளப்பட்ட விபீடணன் ஜன்மாந்திர புண்ணிய விசேடத்தால் அரக்கனென்ற இழிபு நீங்கி அமரர்கட்கும் எட்டாத பெரும்பதமடைந்து இருப்பாராயினர்.

நம் கடமை

ஆதலால், நாமும் ஸ்ரீ இராமபிரானது திருவடிகளைச் சரண மாகப் பற்றி, உடல், பொருள், ஆவி எல்லாம் அவருக்கே அர்ப்பணம் செய்து, கவலையை ஒழித்து, ஜென்ம சாபல்யம் பெற்று உய்வோமாக.

நூற்பயன்

60\. நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
விடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் றோள்வலி கூறுவோர்க்கே.
(த.சி.பா.—12)

அளவு கடந்த இராட்சச சேனை யாவும் மடிந்து சாம்பராய்ப் போகச் செய்து, வெற்றிமாலை அணிந்த வில் ஏந்திய ஸ்ரீ இராம பிரானது தோள் வலிமையைப் புகழ்ந்து பாராட்டுவார்க்கு அவர் கள் விரும்பும் எல்லாப் பொருள்களும் கைவசமாகும். ஞானமும் கீர்த்தியும் உண்டாகும். வீடுபேற்றுக்குரிய வழிகளைத் தந்தருளும். நறுமணங் கமழும் அழகிய தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியும் அருள் புரிவாள்.

61\. இராவணன் றன்னை வீட்டி யிராமனுய் வந்து தோன்றித்
தராதல முழுதுங் காத்துத் தம்பியுந் தானு மாகப்
பராபர மாகி நின்ற பண்பினைப் பகரு வார்கள்
நராபதி யாகிப் பின்னு நமனையும் வெல்லு வாரே.
(யு.கா.—வி.கொ.ப.—38)

பராபரப்பொருளே பூவுலகில் இராமபிரானுக வந்து அவ தரித்து, இராவணுதி அரக்கரை அழித்து, தம்பியுந் தானுமாகப் பூமி முழுதும் காத்தருளிய இப் புண்ணிய சரிதையைச் சொல் பவர்கள், கேட்பவர்கள் யாவரும் மன்னராகவும், மன்னரை யொத்த சிறப்பினர்களாகவும் வாழ்ந்து, பின்னர் யமனையும் வெல்லும் தன்மையையும் பெற்று நற்கதி அடைவார்கள்.

வாழி

62\. வான்வளஞ் சுரக்க நீதி மனுநெறி முறையே யென்றும்
தான்வளர்ந் திடுக நல்லோர் தங்கிளை தழைத்து வாழ்க
தேன்வழங் கமுத மாலைத் தசரத ராமன் செய்கை
யானளந் தறைந்த பாட லிடைவிடா தொளிர்க வெங்கும்.

63\. வாழிய சீரி ராமன் வாழிய சீதை கோமான்
வாழிய கோச லேசை மணிவயி றுதித்த வள்ளல்
வாழிய வாலி மார்பு மராமர மேழுஞ் சாய
வாழிய கணையோன் றேவும் தசரதன் மதலை வாழி.

ஸ்ரீ இராமபிரான் திருவடிகளே சரணம்.
விபீடண சரணுகதி முற்றுப்பெற்றது.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	35	உருளுடைய	உருளுடை
4	3	செல்வங்களையுடை	செல்வங்களையுடைய
,,	24	வக்குன்(று)	விக்துன்(று)
5	12	மாற்றினி	மற்றினி
,,	35	ணிரண்டோடு	ணிரண்டொடு
6	12	கொடித்திரன்	கொடித்திரள்
7	5	டுண்குவே	டுண்குவெ
12	22	அள்ளிக்	சுள்ளிக்
13	35	ஒடி	ஓடி
15	2	யடைப்போம்	யடைப்பேம்
,,	30	பதினுயிரம்	பதினுலாயிரம்
16	25	மானுடர்நம்	மானுடர்ந
20	30	பொருவினேனவுணரோ	பொருவிரேளவுணரோ
21	8	பொழிபெயிற்	பொழியெயிற்
27	29	என்முன்	என்முர்
29	25	கிறுபிள்ளை	சிறுபிள்ளை
30	15	இணிரய	இரணிய
31	16	அனுகினன்	அணுகினன்
32	9	வேண்டுத்ல்	வேண்டுதல்
,,	38	நனியுயர்ந்தோன்	நனியுயர்ந்தான்
44	26	ருலும்	ருனும்